# செந்தமிழ்ப் பயிற்சி நூல்

இரண்டாம் புத்தகம்

(நான்காம் வகுப்பிற்கு)

1149
2.61



ஆசிரியர்

அ. இ[illegible]மநாதன்

SCANNED

TB
031(4)
N61.
148012

மலாயா அரசியலாரின் புதிய பாடத் திட்டத்திற்கிணங்க
எழுதப்பட்ட

ஆரம்பத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஏற்ற

# செந்தமிழ்ப் பயிற்சி நூல்

இரண்டாம் புத்தகம்

(நான்காம் வகுப்பிற்கு)


ஆசிரியர் :

அ. இராமநாதன்


மலாயா ஆங்கிலப் பள்ளிகளிற் பயிலும்
தமிழ் மாணவ மாணவியர்க்கும் பயன்படக் கூடியது.

# TAMIL LANGUAGE WORK BOOK

Written to suit the requirements of the
Government New Education Syllabus.

SECOND BOOK

FOR

Standard IV


Author : A. RAMANATHAN



[ பதிப்புரிமை ]

முதலாம் பதிப்பு — 1961 ஜனுவரி.

பதிப்புரிமை ஆசிரியருக்கே

Published by

**The Author**

30, TAMIL SETTLEMENT,

IPOH, Perak, Malaya.

Printed at 'THE SOUTH INDIA PRESS' Karaikudi-1. Madras State. (S. India.)

சிங்கப்பூர், 'தமிழ் முரசு' நாளிதழின் துணை ஆசிரியர்,
நற்றமிழ் வாணர், உயர்திரு. முருகு. சுப்பிரமணியம் அவர்கள்

எழுதிய

# முன்னுரை

ஆசிரியர் திரு. அ. இராமநாதன் அவர்கள் எழுதியிருக்கும் செந்தமிழ்ப் பயிற்சி நூல் நான்காம் வகுப்புக்குரிய புத்தகத்திற்கு முன்னுரை எழுதும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். மிகுந்த மகிழ்ச்சியோடு இந்தக் காரியத்தைச் செய்ய ஒப்புக்கொண்டேன்.

நம் பிள்ளைகளுக்கு, நம் தாய்மொழியாகிய தமிழை, முறையாக - அறிவியல் அடிப்படையில் கற்பிக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

ஏதோ வகுப்பில் பிள்ளைகளைக் கூட்டிவைத்துத் தமிழ் படிக்கிறார்கள் என்று பெயர்பண்ணி நாட்களை ஓட்டுவது தவறு. ஆங்கில மொழிப் படிப்புக்கு அந்த மொழியில் வெளிவரும் பயிற்சி நூல்களையும், கருவிகளையும், துணை நூல்களையும் பார்க்கும் போது நமக்கு மலைப்பாயிருக்கிறது. உலக மொழியாகிய ஆங்கிலத்தோடு இத்துறையில் நாம் போட்டிபோட முடியாதென்றாலும் பிள்ளைகளுக்கு வரைமுறையான மொழிப்பயிற்சி அளிக்கச் சிறுசிறு முயற்சிகளையாவது நாம் செய்ய வேண்டும்.

இவ் வகையில் செந்தமிழ்ப் பயிற்சிநூல் என்னை மிகக் கவர்ந்தது. நல்ல அநுபவம் வாய்ந்த பள்ளியாசிரியராதலால், திரு. இராமநாதன் அவர்கள் இந் நூலைச் செம்மையான முறையில் எழுதியிருக்கிறார்கள். அவர்களின் நல்ல தமிழ்ப் புலமையும், பரந்த பொது அறிவும், நூலில் காணும் பயிற்சிகளில் மிளிர்கின்றன. தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மட்டுமின்றி, ஆங்கிலப் பள்ளிக்கூடங்களும் தமிழ் மொழிப் பயிற்சிக்கு இந்நூல் வரிசையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தமிழ் நாட்டுப் பள்ளிகளுக்குக்கூட இந்நூல் வரிசை பயன்படுமென்பது என் துணிபு.

மலாயாவிலுள்ள தமிழ்ப் பள்ளிகள் செந்தமிழ்ப் பயிற்சிநூல் வரிசையை நன்கு பயன்படுத்துவதன் மூலம் மொழிப்பயிற்சிக்கு ஆக்கம், தருவார்களென்று நம்புகிறேன். ஆசிரியர் இராமநாதன் அவர்கள் இத்துறையில் மேலும் பல முயற்சிகளை மேற்கொள்வாரென்றும் நம்புகிறேன்.

தமிழ் முரசு
சிங்கப்பூர்
16—9—60

முருகு சுப்பிரமணியன்,
துணையாசிரியர்.

# முகவுரை

'செந்தமிழ்ப் பயிற்சி நூல்' என்னும் வரிசையில் இது நான்காம் வகுப்பிற்குரிய இரண்டாம் புத்தகமாகும். இது மலாயாக் கூட்டரசு அரசியலாரின் புதிய பாடத் திட்டத்திற்கிணங்கப் புது முறையில் எழுதப்பட்டது; எண்பத்திரண்டு பயிற்சிகளைக் கொண்டது.

'பாடநூல் என்பது, ஆசிரியன் சொல்லிக் கொடுத்து மாணவன் கற்றுக் கொள்ளக் கூடிய கருத்துச் செறிவுடையதாய் இருத்தல் வேண்டும்.........'

'பாட நூல்கள் நிரம்பிய பக்கங்கள் கொண்டனவாதல் வேண்டும்'.

'பரந்த பயிற்சியால் மொழிச் செம்மை தானே அமையும்.........' *

– இவை தமிழ்ப் பேராசிரியராகவும், சிறந்த திறனாய்வாளராகவும், நூலாசிரியராகவும் திகழ்ந்து மறைந்த முத்து சிவனார் அவர்களின் அரிய கருத்துக்களாம். இத் தமிழ் மகனாரின் கருத்தை நிறைவேற்ற இயன்ற அளவு முயன்றுள்ளேன். இதில் யான் வெற்றி பெற்றுள்ளேனா என்பது பற்றித் தீர்ப்புக்கூற வேண்டிய பொறுப்பை ஆசிரியர்கள்பால் விட்டு விடுகிறேன்.

இன்றைய தேர்வு முறையில் மாணவர்கள் பாராட்டத்தக்க முறையில் தேர்ச்சி பெறவேண்டுமென்றால், அவர்களிடம் விரைவும், சுறு சுறுப்பும், நுண்ணறிவும் இடம் பெறவேண்டும்.

செந்தமிழ்ப் பயிற்சி நூலிற் காணப்படும் பயிற்சிகள், மாணவ மாணவியரிடம் நுண்ணறிவைப் பெருக்கி, அவர்கள் விரைவாகவும், சரியாகவும் விடை அளிக்கும் ஆற்றலை வளர்க்கும் முறையில் அமைந்துள்ளன. இந்த நன்மைகளைக் கருத்திற் கொண்டு, இப்பயிற்சி நூலைத் தக்கவாறு பயன்படுத்தி, மாணவர்களும் ஆசிரியர்களும் சிறந்த பயனை அடைவார்களென்று நம்புகின்றேன். ஒவ்வொரு பயிற்சியையும் துவங்குமுன் பயிற்சிப் பொருள் குறித்துப் பிள்ளைகளிடம் ஆசிரியர் உரையாடிய பின்னர், பயிற்சியைச் செய்யச் சொல்லுதல் நன்று.

இந்நூலில் தம்முடைய இனிய பாடல்களை இணைத்துக் கொள்ளக் 'குழந்தைக் கவிஞர்' அழ. வள்ளியப்பா அவர்கள், கனிவோடு இசைவளித்தார்கள். அவர்களுக்கு என் இதயங் கலந்த நன்றி உரியதாகுக.

தமிழ் முரசு நாளிதழின் துணையாசிரியர், உயர்திரு. முருகு. சுப்பிரமணியம் அவர்கள் தம் நற்றமிழால் இதற்கொரு முன்னுரை வழங்கி, இதனை அணி செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

செவ்விய முறையில், கவின் பெற இந்நூலை அச்சிட்டுக் கொடுத்த, காரைக்குடி 'சௌத் இந்தியா பிரஸ்' நிருவாகிகளுக்கும் பிற உதவியாளர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

இந்நூலின் வளர்ச்சிக்கான திருத்தங்களும் ஆலோசனைகளும் நன்றியோடு ஏற்றுக்கொள்ளப்படும்.

**அ. இராமநாதன்**
(ஆக்கியோன்)

---

* 'பேராசிரியர் முத்து சிவன் நினைவு மலர்' - பக்கங்கள் 16, 17.
கட்டுரையாசிரியர் : தமிழ்ப்பேராசிரியர், டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள்.

# பொருளடக்கம்


| பயிற்சி எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | பாடத்திட்டம் ... ... | 1 |
| 1 | விழாவின் பெயர் என்ன ? ... ... | 2 |
| 2 | எவ்வகைக் கலை ? ... ... | 4 |
| 3 | எப்படி ஒலிக்கின்றன ? ... ... | 5 |
| 4 | இளம் பருவப் பெயர் என்ன ? ... ... | 6 |
| 5 | குணம் என்ன ? ... ... | 7 |
| 6 | உவமை மொழிகள் I ... ... | 8 |
| 7 | உவமை மொழிகள் II ... ... | 10 |
| 8 | இனம் கண்டு பிடித்தல் ... ... | 12 |
| 9 | வகைப் படுத்துதல் ... ... | 13 |
| 10 | இனஞ் சேர்த்தல் ... ... | 14 |
| 11 | எவ்வாறு இருக்கிறது ? ... ... | 15 |
| 12 | எந்த உலோகம் ? ... ... | 16 |
| 13 | வினவுக் கேற்ப விடை எழுதுதல் I ... ... | 17 |
| 14 | வினவுக் கேற்ப விடை எழுதுதல் II ... ... | 18 |
| 15 | செய்யும் தொழில் என்ன ? ... ... | 19 |
| 16 | சிறிது -- பெரிது ... ... | 21 |
| 17 | எது, எதற்குப் பகை ? ... ... | 22 |
| 18 | சொற்றொடர் ... ... | 23 |
| 19 | இயல்புச் சொற்றொடர் I ... ... | 24 |
| 20 | இயல்புச் சொற்றொடர் II ... ... | 25 |
| 21 | தோன்றல் சொற்றொடர் I ... ... | 26 |
| 22 | தோன்றல் சொற்றொடர் II ... ... | 28 |
| 23 | தோன்றல் சொற்றொடர் III ... ... | 29 |
| 24 | தோன்றல் சொற்றொடர் IV ... ... | 30 |
| 25 | திரிதல் சொற்றொடர் I ... ... | 31 |
| 26 | திரிதல் சொற்றொடர் II ... ... | 33 |
| 27 | கெடுதல் சொற்றொடர் I ... ... | 34 |
| 28 | கெடுதல் சொற்றொடர் II ... ... | 35 |
| 29 | எண்ணுப் பெயர்களைச் சேர்த்து எழுதுதல் ... ... | 36 |
| 30 | எண்ணுப் பெயர்களைப் பிரித்து எழுதுதல் ... ... | 37 |
| 31 | எண்ணுப் பெயர்களைச் சேர்த்து எழுதுதல் ... ... | 38 |
| 32 | எண்ணுப் பெயர்களைப் பிரித்து எழுதுதல் ... ... | 39 |
| 33 | சொற்களை நிறைவு செய்தல் ... ... | 40 |
| 34 | அடுக்கு மொழிகள் ... ... | 41 |
| 35 | அடுக்குத் தொடர்கள் ... ... | 42 |
| 36 | வேறு இரு பொருள் கூறுதல் ... ... | 44 |
| 37 | ஒரே ஓசைப் பெயர்ச் சொற்கள் I ... ... | 45 |
| 38 | ஒரே ஓசைப் பெயர்ச் சொற்கள் II ... ... | 46 |
| 39 | சொல் திருத்தம் I ... ... | 47 |
| 40 | சொல் திருத்தம் II ... ... | 47 |
| 41 | எதிர்ச் சொற்கள் I ... ... | 48 |
| 42 | எதிர்ச் சொற்கள் II ... ... | 49 |

| பயிற்சி எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 43 | எதிர்ச் சொற்கள் III ... ... | 50 |
| 44 | திசைச் சொற்கள் I ... ... | 51 |
| 45 | திசைச் சொற்கள் II ... ... | 53 |
| 46 | சொற் சேர்ப்பு I ... ... | 54 |
| 47 | சொற் சேர்ப்பு II ... ... | 55 |
| 48 | சொற் சேர்ப்பு III ... ... | 56 |
| 49 | சொற் சேர்ப்பு IV ... ... | 57 |
| 50 | புதிர்களின் பொருள் அறிதல் ... ... | 58 |
| 51 | பாடலின் பொருள் அறிதல் I ... ... | 60 |
| 52 | பாடலின் பொருள் அறிதல் II ... .. | 61 |
| 53 | பாடலின் பொருள் அறிதல் III ... ... | 62 |
| 54 | 'ண' கர, 'ன' கர வேறுபாடு அறிதல் ... ... | 64 |
| 55 | 'ர' கர, 'ற' கர வேறுபாடு அறிதல் ... ... | 65 |
| 56 | 'ல' கர, 'ழ' கர வேறுபாடு அறிதல் ... ... | 66 |
| 57 | 'ல' கர, 'ள' கர வேறுபாடு அறிதல் ... ... | 67 |
| 58 | 'ள' கர, 'ழ' கர வேறுபாடு அறிதல் ... ... | 68 |
| 59 | எண்ணி அறிய முடியும் பொருளும் எண்ணி அறிய முடியாப் பொருளும் ... ... | 69 |
| 60 | வாக்கியங்கள் அமைத்தல் I ... ... | 71 |
| 61 | வாக்கியங்கள் அமைத்தல் II ... ... | 72 |
| 62 | தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக்குதல் ... ... | 73 |
| 63 | தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக்குதல் ... ... | 74 |
| 64 | திணை ... ... | 75 |
| 65 | பால் ... ... | 76 |
| 66 | ஒருமை — பன்மை ... ... | 78 |
| 67 | பன்மை — ஒருமை ... ... | 79 |
| 68 | காலம் ... ... | 80 |
| 69 | இடைச் சொல் ... ... | 81 |
| 70 | சுட்டுச் சொல் ... ... | 82 |
| 71 | ஏற்ற பயனிலைகளை எழுதுதல் ... ... | 83 |
| 72 | ஏற்ற எழுவாய்களை எழுதுதல் ... ... | 84 |
| 73 | ஏற்ற செயப்படுபொருள்களை எழுதுதல் ... ... | 85 |
| 74 | எழுவாய்-பயனிலை-செயப்படுபொருள் ... ... | 86 |
| 75 | பயனிலை அடைமொழி ... ... | 87 |
| 76 | எழுவாய் அடைமொழி ... ... | 88 |
| 77 | செயப்படுபொருள் அடைமொழி ... ... | 89 |
| | மாதிரி அழைப்புக் கடிதம் ... ... | 90 |
| 78 | அழைப்புக் கடிதம் ... ... | 91 |
| | மாதிரி விடுமுறைக் கடிதம் ... ... | 92 |
| 79 | விடுமுறைக் கடிதம் ... ... | 93 |
| | சிறு மாதிரி வருணனைக் கடிதம் ... ... | 94 |
| 80 | வருணனைக் கடிதம் ... ... | 95 |
| 81 | கதைப் பொருள் அறிதல் ... ... | 96 |
| | படங்களைப் பார்த்துக் கதை எழுதுதல் (மாதிரி) ... ... | 97 |
| 82 | படங்களைப் பார்த்துக் கதை எழுதுதல் ... ... | 98 |

நான்காம் வகுப்பிற்குரிய

# மொழிப் பயிற்சிப் பாடத் திட்டம்

**மொழிப் பயிற்சி:**

1. சொற்களின் பொருள்களைத் தெரிந்து கொள்வதற்காக அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுதல்.

2. கலைச் சொற்கள், எதிர்மறைச் சொற்கள், இடத்திற்கு ஏற்ப, ஒரு சொல்லின் பற்பல பொருள் வேறுபாடுகள் ஆகியவற்றை அறிதல்.

3. 1,800 சொற்கள் வரை சொல்வளம் விரிவடைவதற்கு ஏற்ப ஒரு சொற் பலபொருள், பலபொருள் ஒரு சொல், சொல்லாக்கம் முதலியவற்றைக் கற்றல்.

4. கற்றதை அல்லது உணர்ந்ததை வெளிப்படுத்துதல்.

5. சிறு கதைகள் எழுதுதல்.

6. கடிதம் எழுதுதல்:

   (அ) எளிய விடுமுறைக் கடிதங்கள்.

   (ஆ) நண்பனுக்கு எழுதும் அழைப்புக் கடிதங்கள்.

   (இ) ஒரு நிகழ்ச்சியை விவரிக்கும் வருணனைக் கடிதங்கள்.

**இலக்கணப் பயிற்சி:**

1. திணை, பால் – எண்கள்.
2. மூவகைக் காலங்கள்.
3. எழுவாய் – பயனிலை – செயப்படுபொருள்.
4. சுட்டுப் பெயர்.
5. இடைச் சொல்.
6. பெயர் அடைமொழி அல்லது பெயர் உரிச்சொல்.
7. வினை அடைமொழி அல்லது வினை உரிச்சொல்.
8. உயிர் எழுத்து – மெய்யெழுத்து – உயிர் மெய்யெழுத்து வகைகள்.

பயிற்சி :– 1

# விழாவின் பெயர் என்ன?

மலாயா பல இனத்தவர் வாழும் நாடு. இங்குப் பற்பல சமயக் கொள்கையினர் வாழுகின்றனர். மலாயாப் பாடசாலைகளுக்கும், அரசாங்க அலுவலகங்களுக்கும் சமயத் தொடர்புடைய விழாக்களுக்காக விடுமுறை அளிக்கப்படுகிறது.

வீடுகளிலும், பாடசாலைகளிலும், கோவில்களிலும், பொது மன்றங்களிலும் நீங்கள் பலவகை விழாக்கள் நடைபெறுவதைக் காண்கிறீர்கள். இவற்றுள் சமயத் தொடர்புடைய விழாக்கள் யாவை? சமூகத் தொடர்பு அற்ற குடும்ப, சமூக, கலைகள் பற்றிய விழாக்கள் யாவை? என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

அடியில் உள்ள ஒவ்வொரு தொடரும் ஒவ்வொரு விழாவைப் பற்றிக் கூறுகின்றது. ஒவ்வொரு தொடரையும் கவனமாகப் படி. பின்னர், அத்தொடர் குறிக்கும் விழாவின் பெயரை, அத்தொடரின் கடைசியிற் கோடிட்ட இடத்தில் எழுது. எழுத வேண்டிய விழாக்களின் பெயர்களைக் கீழே காண்க.

**மாதிரி :—**

தமிழர் பண்பாடுகளை நினைவு படுத்தும் நாள் **தமிழர் திருநாள்.**

1 புத்தகங்களையும் கருவிகளையும் வைத்து வணங்குவது ........................ .

2 மாடுகளுக்குப் பூசை செய்து சோறு ஊட்டுவது ........................ .

3 விடியற்காலையில் மத்தாப்புக் கொளுத்திக் கொண்டாடுவது ........................ .

4 இந்துக் கோவில்களில் தை மாதத்திற் கொண்டாடப் படுவது ........................ .

5 இந்துக் கோவில்களில் மாசிமாதத்திற் கொண்டாடப் படுவது ........................ .

6 இந்துக் கோவில்களிற் பங்குனிமாதத்திற் கொண்டாடப் படுவது ........................ .

7 இந்துக் கோவில்களில் வைகாசிமாதத்திற் கொண்டாடப் படுவது ........................ .

8 வீட்டிற் பிள்ளைகளுக்குக் காது குத்தலைக் கொண்டாடுவது ______________ .

9 வீட்டிற் பிள்ளைகளுக்குப் பெயரிடுதலைக் கொண்டாடுவது ______________ .

10 டிசம்பர் மாதத்தில் மாதா கோவிலிற் கொண்டாடப்படுவது ______________ .

11 இஸ்லாமியர்கள் விரதமிருந்து கொண்டாடுவது ______________ .

12 பாடசாலைகளிற் பெற்றோருக்காக நடைபெறுவது ______________ .

13 பாரதியாரைக் குறித்துப் பேசப்படும் நாள் ______________ .

14 திருவள்ளுவரைக் குறித்துக் கொண்டாடப்படுவது ______________ .

15 மலாயாவில் ஆகஸ்டு மாதம் 31-ம் நாள் கொண்டாடப் படுவது ______________ .

## நிரப்ப வேண்டிய பெயர்கள்

1. காதணி விழா 2. நோன்புப் பெருநாள் 3. சுதந்திர தினம் 4. பெயரிடு விழா 5. பெற்றோர் தினம் 6. பூசம் 7. வள்ளுவர் விழா 8. மகம் 9. பாரதி விழா 10. உத்திரம் 11. தீபாவளி 12. விசாகம் 13. பொங்கல் 14. கிறிஸ்து பிறப்பு 15. கலைமகள் விழா.

பயிற்சி :– 2

# எவ்வகைக் கலை ?

மாந்தர் கற்றுக் கொள்ளும் பலவகை அறிவுத் திரள் அனைத்தும், 'கலை' என்னும் பிரிவினுள் அடங்கும். பண்டைய மக்கள் கலைகளை அறுபத்து நான்கு என்றனர். இன்றைய நிலையிற் கலைகள் நூற்றுக்கணக்காக வளர்ந்து விரிந்துள்ளன. அவற்றை நீங்கள் அறிதல் வேண்டும்.

முதலாம் வரிசையிற் சில கலைகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை இரண்டாம் வரிசையில் இடமறிந்து நிரப்பு.

**மாதிரி :–**

அச்சடிக்கும் தொழில் பற்றிக் கூறுவது ..................... .

அச்சடிக்கும் தொழில் பற்றிக் கூறுவது **அச்சுக்கலை.**

## முதலாம் வரிசை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கணிதக் கலை | 2. | கட்டடக் கலை | 3. | மண்ணியற் கலை |
| 4. | சமயக்கலை | 5. | ஆட்சிக்கலை | 6. | சமையற்கலை |
| 7. | அறிவியற்கலை | 8. | ஒப்பனைக்கலை | 9. | உடற்பயிற்சிக் கலை |
| 10. | இலக்கியக்கலை | 11. | ஓவியக்கலை | 12. | இசைக்கலை |
| 13. | மொழிக்கலை | 14. | வாணிகக்கலை | 15. | கவிதைக் கலை |

## இரண்டாம் வரிசை.

1 கட்டடங்கள் கட்டும் முறையைக் கூறுவது ..................... .
2 மத நுட்பங்களை மொழிவது ..................... .
3 பாடல்கள் இயற்றும் முறைமையை விளக்குவது ..................... .
4 மொழிகளின் இயல்பை உரைப்பது ..................... .
5 இசைகளின் தன்மையைப் பகருவது ..................... .
6 இலக்கிய இன்பங்களை உரைப்பது ..................... .
7 நடிக நடிகையரை அழகு படுத்துவதை உணர்த்துவது ..................... .
8 சுவையான உண்டி தயாரிக்கும் முறைகளைக் கூறுவது ..................... .
9 கணக்குகளின் கூறுபாடுகளை விரித்துரைப்பது ..................... .
10 மண்ணின் தன்மைகளை மொழிவது ..................... .
11 அரசாளும் நெறியைப் போதிப்பது ..................... .
12 விஞ்ஞான நுட்பங்களை உணர்த்துவது ..................... .
13 உடலை உறுதி செய்யும் வழிகளைக் கூறுவது ..................... .
14 படங்கள் வரையும் முறைகளை மொழிவது ..................... .
15 வர்த்தக நுணுக்கங்களை உரைப்பது ..................... .

பயிற்சி :– 3

## எப்படி ஒலிக்கின்றன ?

'காளை கூவுகிறது, மணி கத்துகிறது' எனக் கூறுவது பொருத்தமாயில்லை; செவிக்கு இனிமையாயுமில்லை. **'காளை முக்காரமிடுகிறது, மணி ஒலிக்கிறது'** எனக் கூறுவதே பொருத்தமாகும். இவ்வாறு, ஒவ்வோர் உயிரின் ஒலியையும், பொருளின் ஒலியையும் முன்னோர் மொழிந்த முறைப்படி மொழிவது, மொழி மரபு எனப்படும். இந்த ஒலி மரபை நீங்கள் நன்குணர்ந்து கொள்ளவேண்டும்.

கீழ்க்கண்ட உயிர்களும், பொருள்களும் எவ்வாறு ஒலிக்கின்றன என்பதை, அந்தந்தப் பொருளின் எதிரே அடைப்புக் குறியினுள் உள்ள சொற்களிலிருந்து கண்டு பிடித்து ஒவ்வொரு விடையின் கீழும் கோடிடு.

**மாதிரி :–**

சங்கு (குதிக்கும், முழங்கும், துள்ளும்.)

| | | |
|---|---|---|
| 1 | குருவி | ( பாடும், சாடும், கீச்சிடும். ) |
| 2 | ஆந்தை | ( சிணுங்கும், அலறும், முணுமுணுக்கும். ) |
| 3 | புறு | ( குறுகுறுக்கும், சலசலக்கும், கெச்சிடும். ) |
| 4 | வானம்பாடி | ( சிரிக்கும், கூவும், பாடும். ) |
| 5 | வண்டு | ( கரையும், ரீங்காரமிடும், கதறும். ) |
| 6 | எலி | ( ஊளையிடும், சீறும், கருகருக்கும். ) |
| 7 | பெருச்சாளி | ( கத்தும், உறுமும், எச்சென்னும். ) |
| 8 | கழுதைப்புலி | ( கனைக்கும், அழும், சிரிக்கும். ) |
| 9 | தேவாங்கு | ( கீச்சிடும், பேசும், அழும். ) |
| 10 | இடி | ( தள்ளும், இடிக்கும், குத்தும். ) |
| 11 | கடல் | ( இரையும், அலையும், குதிக்கும். ) |
| 12 | மேகம் | ( பறக்கும், முழங்கும், நகரும். ) |
| 13 | வானம் | ( குளிரும், குமுறும், பிளிறும். ) |
| 14 | அருவி | ( கீச்சிடும், சலசலக்கும், குதிக்கும். ) |
| 15 | முரசு | ( அடிக்கும், ஆர்க்கும், சத்தம் போடும். ) |

பயிற்சி :– 4

# இளம் பருவப் பெயர் என்ன?

'ஆட்டுக்குஞ்சு, கோழிக்குட்டி' எனக் கூறுவது சரியாயில்லை. செவிக்கும் வெறுப்பை அளிக்கிறது. **'ஆட்டுக்குட்டி, கோழிக்குஞ்சு'** எனக் கூறுவதே சரியான முறையாகும். இங்ஙனம் ஒவ்வோர் உயிரின் இளம் பருவத்தையும் முன்னோர் அழைத்த முறைப்படி அழைப்பது, *'இளமை மரபு'* எனப்படும். இந்த இளமை மரபு முறையை நீங்கள் நன்ருகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கீழே நான்கு வகை இளமை மரபுப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை எங்கெங்கு இணைக்க வேண்டுமோ அங்கங்கு இணை.

**மாதிரி :–**

**குஞ்சு - குட்டி - பிள்ளை**

1. அணில்__________ 2. கவரி__________ 3. மைனு__________

1. அணிற் **பிள்ளை** 2. கவரிக் **குட்டி** 3. மைனுக் **குஞ்சு**

### *உயிரினங்கள்*

| | | | |
|---|---|---|---|
| 1 திமிங்கிலக் | .................... | 9 வேப்பங் | .................... |
| 2 முதலைக் | .................... | 10 தவளைக் | .................... |
| 3 தாழைக் | .................... | 11 மான் | .................... |
| 4 வாழைக் | .................... | 12 தென்னம் | .................... |
| 5 காக்கைக் | .................... | 13 யானைக் | .................... |
| 6 எருமைக் | .................... | 14 கிளி | .................... |
| 7 எலுமிச்சங் | .................... | 15 புரு | .................... |
| 8 பாம்புக் | .................... | 16 கீரி | .................... |

மேலே பொருத்த வேண்டிய இளம் பருவப் பெயர்கள்.

**1. கன்று. 2. குஞ்சு. 3. குட்டி. 4. பிள்ளை.**

பயிற்சி :— 5

## குணம் என்ன?

அடியிலுள்ள ஒவ்வொரு பத்தியையும் கவனமாகப் படி. பின்னர், ஒவ்வொரு பத்தியின் கீழும் தரப்பட்டுள்ள மூன்று விடைகளுள், சரியான விடையை அறிந்து அதன் கீழ்க் கோடு இடு.

**மாதிரி :—**

மாதவிக்கு வயிற்று நோவு. மருத்துவர் கொடுத்த விளக்கெண்ணெயை வாங்கிக் கொஞ்சமும் முணு முணுக்காமல் அருந்தினுள். மாதவியின் குணம் எப்படிப்பட்டது?

(அ) குறும்புக்காரி. (ஆ) பிடிவாதக்காரி. (இ) <u>பொறுமைசாலி.</u>

1. மேரிக்கு அவள் தந்தை ஒரு பெரிய மாம்பழங் கொடுத்தார். அவள் அதைத் தன் தம்பிக்குக் காட்டாமல் தானே முழுவதையும் தின்று விட்டாள். அவள் எப்படிப் பட்டவள்?

   (அ) பசியுள்ளவள். (ஆ) தன்னலமுள்ளவள். (இ) அன்புள்ளவள்.

2. அந்தோனிக்கு அவன் தாயார் நாள்தோறும் பத்துக்காசு கொடுப்பார். அவன் அதில் ஐந்து காசு மீதம் பண்ணி உண்டியலிற் போடுவான். ஒரு வெள்ளி சேர்ந்ததும் அஞ்சல் நிலையத்திற் சேமித்து வைப்பான். அவன் எப்படிப் பட்டவன்?

   (அ) கஞ்சன். (ஆ) சிக்கனக்காரன். (இ) செலவாளி.

3. மோட்டாரோட்டி சாலை வழியே சென்று கொண்டிருந்தார். தெருவில் விளையாடிய சிறுவன் திடீரெனக் குறுக்கே ஓடி வந்து அடிப்பட்டு வீழ்ந்தான். மோட்டாரோட்டி வண்டியை நிறுத்தி, அவனை மருத்துவ நிலையத்திற்குக் கொண்டு சென்று மருந்து கட்டச் சொன்னுர். அவர் எப்படிப் பட்டவர்?

   (அ) கடமை உணர்ந்தவர். (ஆ) கண் கெட்டவர்.
   (இ) பைத்தியக்காரர்.

4. அஞ்சல் நிலையத்தில் சிலர் வரிசையாக நின்று அஞ்சல் தலை வாங்கினுர்கள். ஒருவன் மட்டும் வரிசையில் நில்லாமல் எல்லாருக்கும் முன்னுல் போய் நின்ருன். மற்றவர்கள் அவனைப் பின்னுக்குப் போகச் சொன்னுர்கள். அவன் போக மறுத்து வம்பு செய்தான். அவன் எப்படிப் பட்டவன்?

   (அ) துணிவுள்ளவன். (ஆ) மூர்க்கன். (இ) அவசரக்காரன்.

5. கோமதி பள்ளிக்கூட மணி அடிப்பதற்கு முன்பே பாடசாலைக்கு வந்து விடுவாள். அவள் தங்கை மணியடிக்கும் பொழுதுதான் படுக்கையை விட்டு அவசரமாக எழுந்து பல் துலக்குவாள். கோமதியின் தங்கை எப்படிப் பட்டவள்?

   (அ) தூங்குமூஞ்சி. (ஆ) சொகுசுக்காரி. (இ) பணக்காரி.

பயிற்சி :-6

## உவமை மொழிகள் I.

ஒரு பொருளின் இய்ல்பை மற்றொரு பொருளை உதாரணமாகக் காட்டுவதன் மூலம் மிக எளிதாகப் புலப்படுத்தலாம்.

1. சுந்தராம்பாளின் குரல் இனியது.

2. சுந்தராம்பாளின் குரல் **குயிலின் குரலைப் போல** இனியது.

முதலாம் வாக்கியம் சுந்தராம்பாளின் குரல் இனியதென்று கூறுகிறது. இரண்டாம் வாக்கியம் ***'குயிலைப் போல'*** என்னும் ஓர் உதாரணச் சொல்லைப் பெற்றுச் சுந்தராம்பாளின் குரல் சிறப்பை எளிதாகப் புலப்படுத்துகிறது.

ஒரு பொருளின் உண்மையான இயல்பை உணர்த்த உதாரணமாக வருஞ் சொல்லை ***'உவமைச் சொல்'*** என்பர்.

அடியிலுள்ள உவமை மொழிகளைக் கோடிட்ட இடங்களிற் பொருத்து.

**மாதிரி :-**

ஓநாயைப் போல ..........................

ஓநாயைப் போலப் பசி

பொருத்த வேண்டிய உவமை மொழிகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஒளி | 2. மந்த நடை | 3. சிவப்பு | 4. மாறுதல் |
| 5. பொறுமை | 6. மயிரடர்த்தி | 7. மனவுறுதி | 8. சாது |
| 9. கனம் | 10. பாசாங்கு | 11. வெண்மை | 12. பிடி |
| 13. நன்றி | 14. நடை | 15. குரூரம் | 16. சாயல் |
| 17. கபடம் | 18. புளிப்பு | 19. இனிப்பு | 20. வேகம். |

1. கரடியைப் போல .............................................................. .
2. பசுவைப் போலச் .............................................................. .
3. பூனையைப் போலப் .............................................................. .
4. நாயைப் போலப் .............................................................. .
5. புலியைப் போலக் .............................................................. .
6. யானைப் போலக் .............................................................. .

7. முயலைப் போல ..............................................................

8. உடும்பைப் போலப் ..............................................................

9. நத்தையைப் போல ..............................................................

10. கதிரவனைப் போல ..............................................................

11. பருவ காலத்தைப் போல ..............................................................

12. நிலத்தைப் போலப் ..............................................................

13. பாறையைப் போல ..............................................................

14. இரும்பைப் போலக் ..............................................................

15. பஞ்சைப் போல ..............................................................

16. தேனைப் போல ..............................................................

17. எலுமிச்சம் பழத்தைப் போலப் ..............................................................

18. மயிலைப் போலச் ..............................................................

19. அன்னம் போல ..............................................................

20. சேவற் கொண்டையைப் போலச் ..............................................................

பயிற்சி :- 7

# உவமை மொழிகள் II

அடியிலுள்ள சொற்றொடர்களிற், கோடிட்ட இடங்களிற் பொருத்தமான உவமைச் சொற்களை நிரப்பு. நிரப்ப வேண்டிய சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**மாதிரி :–**

மாட்டிறைச்சியை மலாய்க்காரர் விரும்புவது போலப் பன்றி இறைச்சியைச் சீனர் விரும்புகின்றனர்.

1 சிலந்தி ஈயைப் பிடித்துத் தின்பது போலப் பூனை .................................... யைப் பிடித்துத் தின்கிறது.

2 புகைவண்டி நிலையம் புகைவண்டி தங்கிச்செல்ல உதவுவது போலத் .................................... கப்பல் தங்கிச் செல்ல உதவுகிறது.

3 வடக்குக்கு எதிர்ப்புறம் தெற்கு இருப்பது போலக் கிழக்குக்கு எதிர்ப் புறம் .................................... இருக்கிறது.

4 துக்கத்தின் காரணமாகக் கண்ணீர் தோன்றுவது போல, மகிழ்வின் காரணமாகப் .................................... தோன்றும்.

5 ஓவியர் படம் வரைவது போலப் புதின ஆசிரியர் .................................... எழுதுவார்.

6 மீன் நீந்த மீன் சிறகு உதவுவது போலப், பறவை பறக்க .................................... உதவுகின்றது.

7 வெப்பத்தால் நீராவி உண்டாதல் போல, நெருப்பாற் .................................... உண்டாகும்.

8 முதலையினிடம் சிக்கிய உயிர் மீளாதது போல, மலைப்பாம்பினிடம் சிக்கிய .................................... மீளாது.

9 நாட்களை வாரத்தின் பகுதிகள் என்பது போல, மாதங்களை .................................... பகுதிகள் என்பர்.

10 வில்லிற் பொருத்த அம்புகள் தேவைப்படுதல் போலத், துப்பாக்கியிற் பொருத்தத் ............................................ தேவை.

11 செவ்வாயை அடுத்துப் புதன் வருவது போல, நவம்பரை அடுத்து ............................................ வரும்.

12 மலையின் அருகே பள்ளத்தாக்கு அமைந்திருத்தல் போலப் பட்டணங்களின் அருகே ............................................ அமைந்திருக்கின்றன.

13 மிதியடிகள் மனிதரின் பாதங்களைக் காப்பதுபோல, ............................................ குதிரையின் குளம்புகளைக் காக்கின்றன.

14 கோவேறு கழுதை குதிரையின் இனமாயிருத்தல் போல, ஓநாய் ............................................ இனமாயிருக்கிறது.

15 காலோடு கால்விரல்கள் பொருந்தியிருப்பது போலக் கழுத்தோடு ............................................ பொருந்தியிருக்கிறது.

## நிரப்ப வேண்டிய சொற்கள்.

| | | |
|---|---|---|
| 1. டிசம்பர் | 2. கிராமங்கள் | 3. இலாடங்கள் |
| 4. நரியின் | 5. தலை | 6. தொடர் கதை |
| 7. புன்னகை | 8. மேற்கு | 9. துறைமுகம் |
| 10. எலி | 11. தோட்டாக்கள் | 12. ஆண்டின் |
| 13. பிராணி | 14. புகை | 15. இறக்கை |

பயிற்சி :- 8

# இனம் கண்டு பிடித்தல்

ஒவ்வொரு வரிசைச் சொற்களிலும் அந்த இனத்தைச் சேராத சொல் ஒன்று இருக்கிறது. அதைக் கண்டு பிடித்து அதன் கீழ்க் கோடிடு.

**மாதிரி :-**

பேராநதி - **தைப்பிங்ஏரி** - பாகாங்நதி - கிளந்தான் நதி.

1 தமிழ் - சீனம் - பானகம் - மலாய்.

2 அறுகம்புல் - தருப்பைப்புல் - தொட்டாற்சுருங்கி - எலுமிச்சைப்புல்.

3 திலகவதி - மங்கை பாகன் - மங்கையர்க்கரசி - பாத்திமா.

4 மணிவாசகன் - இசைவாணி - இளங்கோ - தாவீது.

5 கல்லெண்ணெய் - நல்லெண்ணெய் - வேப்பெண்ணெய் - கடலை எண்ணெய்.

6 நிலக்கரி - நிலக்கடலை - ஈயம் - இரும்பு.

7 இந்துசமயம் - தற்சமயம் - புத்த சமயம் - கிறிஸ்தவ சமயம்.

8 கோலாலும்பூர் - ஈப்போ - தைப்பிங் - மலாக்கா.

9 கோலக்கிள்ளான் - கம்பார் - மலாக்கா - கோலப்பிறை.

10 பினங்குத்தீவு - இலங்காவித்தீவு - சிங்கப்பூர் - ஜோகூர்.

11 தேவாலயம் - பள்ளிவாசல் - கன்னிமாடம் - திருக்கோவில்.

12 சொற்றொடர் - உவமைத்தொடர் - மலைத்தொடர் - மரபுத்தொடர்.

13 படகு - பவளம் - சங்கு - சிப்பி.

14 மல்லிகை - முல்லை - ரோஜா - பரங்கி.

15 பாசி - குவளை - தாமரை - அல்லி.

16 வண்ணத்துப்பூச்சி - அட்டை - செய்யான் - பூரான்.

17 நண்டு - இறால் - மீன் - மீன்கொத்தி.

18 தேனீ - பாம்பு - குளவி - கருவண்டு.

19 நாளிதழ் - புறவிதழ் - கிழமை இதழ் - திங்களிதழ்

20 வீணை - மணி - நாகசுரம் - வேய்ங்குழல்.

பயிற்சி :- 9

## வகைப்படுத்துதல்

பின் வருவனவற்றை விலங்கு, பறவை, மரஞ்செடி, புழு, பூச்சி என நான்கு பிரிவுகளாக வகைப்படுத்து.

**மாதிரி :-**

| விலங்கு | பறவை | மரஞ்செடி | புழு, பூச்சி |
|---|---|---|---|
| யானை | புறா | மாமரம் | கொசுகு. |

### வகைப் படுத்த வேண்டியவை

1. மண் புழு. 2. தாழை. 3. ஒட்டகம். 4. வான்கோழி.
5. மான். 6. தீக்கோழி. 7. அன்னுசிச்செடி. 8. சிலந்தி.
9. நாணற்புல். 10. சிவிங்கி. 11. குளவி. 12. கிளி. 13. எலுமிச்சை.
14. சிறுத்தை. 15. தேனீ. 16. ஆந்தை. 17. தென்னம்பிள்ளை.
18. மூட்டுப்பூச்சி. 19. குயில். 20. குரங்கு. 21. கரும்பு. 22. பேன்.
23. காண்டா மிருகம். 24. வாத்து. 25. தும்பி. 26. காண்டா மரம்.
27. மீன்கொத்தி. 28. ஓநாய். 29. கரடி. 30. கறிவேப்பிலை.
31. கொக்கு. 32. வண்ணத்துப் பூச்சி.

| | விலங்கு | பறவை | மரஞ்செடி | புழு, பூச்சி |
|---|---|---|---|---|
| 1 | .................... | .................... | .................... | .................... |
| 2 | .................... | .................... | .................... | .................... |
| 3 | .................... | .................... | .................... | .................... |
| 4 | .................... | .................... | .................... | .................... |
| 5 | .................... | .................... | .................... | .................... |
| 6 | .................... | .................... | .................... | .................... |
| 7 | .................... | .................... | .................... | .................... |
| 8 | .................... | .................... | .................... | .................... |

பயிற்சி :– 10

# இனஞ் சேர்த்தல்

ஒவ்வோர் இனத்திற்கும் அதே இனத்தைச் சேர்ந்த வேறு மூன்று பொருள்களின் பெயர்களை எழுது.

**மாதிரி :-**

மோதிரம் – **வளையல் – தோடு – கழுத்தணி.**

| | | | |
|---|---|---|---|
| 1 சிட்டுக்குருவி | ........................ | ........................ | ........................ |
| 2 ஆந்தை | ........................ | ........................ | ........................ |
| 3 பூனை | ........................ | ........................ | ........................ |
| 4 நாய் | ........................ | ........................ | ........................ |
| 5 யானை | ........................ | ........................ | ........................ |
| 6 ஒட்டகம் | ........................ | ........................ | ........................ |
| 7 கோழி | ........................ | ........................ | ........................ |
| 8 தங்கம் | ........................ | ........................ | ........................ |
| 9 மேசை | ........................ | ........................ | ........................ |
| 10 வாழை | ........................ | ........................ | ........................ |
| 11 வேம்பு | ........................ | ........................ | ........................ |
| 12 இலை | ........................ | ........................ | ........................ |
| 13 மங்குஸ்தீன் | ........................ | ........................ | ........................ |
| 14 சுரைக்காய் | ........................ | ........................ | ........................ |
| 15 தக்காளி | ........................ | ........................ | ........................ |
| 16 இஞ்சி | ........................ | ........................ | ........................ |
| 17 மொச்சை | ........................ | ........................ | ........................ |
| 18 கோடரி | ........................ | ........................ | ........................ |
| 19 தாவணி | ........................ | ........................ | ........................ |
| 20 வேட்டி | ........................ | ........................ | ........................ |

பயிற்சி :– 11

## எவ்வாறு இருக்கிறது ?

கீழ்க்கண்ட ஒவ்வொரு தொடரையும் படி. பின்னர், எது எவ்வாறு இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்துக் கோடிட்ட இடங்களில் எழுது. விடைகள் அடியில் தரப்பட்டிருக்கின்றன.

**மாதிரி :–**

யானை நிலக்கரியைப் போன்று கருமை யாயிருக்கிறது.

1 சங்கு கொக்கைப் போல ........................ யாயிருக்கிறது.

2 பூனையின் உரோமம், பட்டுப்போல ........................ வாயிருக்கிறது.

3 மணிப்புருவின் கருவிழி உளுந்து போலக் ........................ யாயிருக்கிறது.

4 பலாப்பழத்தின் மேற்புறம் கல்லைப்போலச் ........................ இருக்கிறது.

5 ஆற்றுநீர், அதிகாலையில் பனிக்கட்டிபோல் ........................ இருந்தது.

6 புல்லின் நுனியிலிருந்த பனிநீர், முத்துப் போல் ........................ யாகக் காணப்பட்டது.

7 மெருகிட்ட வெள்ளிக் கிண்ணம் வைரத்தைப் போற் ........................ விளங்கிற்று.

8 காய்ச்சலாயிருப்பவன் உடம்பு, நெருப்பைப் போலச் ........................ இருக்கிறது.

9 டுரியானின் மேற்புறத்தில் ஊசியைப் போல ........................ நீட்டிக் கொண்டிருந்தன.

10 நன்ருய்ச் சலவை செய்த ஆடை மல்லிகை மலர் போல ........................ யாயிருந்தது.

11 காகம் வேப்பம்பழத்தை விரும்பித் தின்பது போல, ஒட்டகம் ________ யை விரும்பித் தின்னும்.

12 முதலையின் மேல்தோல் மரப்பட்டையைப் போலக் ........................ இருக்கிறது.

### நிரப்ப வேண்டியவை

1. பளபளப்பாய் 2. வெண்மை 3. சூடாய் 4. சில்லென்று
5. முட்கள் 6. சுரசுரப்பாய் 7. வேப்பிலை 8. கருமை
9. கரடுமுருடாய் 10. மிருது.

பயிற்சி :— 12

## எந்த உலோகம் ?

ஒவ்வொரு தொடரையும் கவனமாகப் படித்தபின், விடைகளைக் கோடிட்ட இடங்களில் எழுது. எழுத வேண்டிய விடைகள் அடியில் உள்ளன.

**மாதிரி :—**

(பென்சில்) எழுதுகோல் செய்யப் பயன்படும் உலோகம் ........ ***காரீயம்.***

1 அச்சு எழுத்துக்கள் செய்ய உதவும் உலோகம் ............ .

2 பாத்திரங்களின் ஓட்டைகளை அடைக்க உதவும் உலோகம் ............ .

3 பழங்கள் முதலியவற்றை அடைக்க உதவும் உலோகம் ............ .

4 நாணயஞ் செய்ய உதவும் வெண்ணிற உலோகம் ............ .

5 நீர் பட்டால் துருப்பிடிக்கும் உலோகம் ............ .

6 களிம்பு ஏறும் உலோகம் ............ .

7 மஞ்சள் நிற உலோகம் ............ .

8 பாத்திரங்கள் செய்ய உதவும் இலேசான வெண்ணிற உலோகம் ............ .

9 மணி செய்ய உதவும் உலோகம் ............ .

10 கத்தி, வாள் முதலியவை செய்ய உதவும் உலோகம் ............ .

11 கீழே சிந்திஞற் சிதறி ஓடும் உலோகப் பொருள் ............ .

12 பால் வாளி முதலியன செய்யப் பயன்படும் உலோகம் ............ .

### நிரப்ப வேண்டிய சொற்கள்.

1. பாதரசம் 2. தகரம் 3. துத்துநாகம் 4. காரீயம் 5. உருக்கு 6. வெள்ளீயம் 7. வெண்கலம் 8. வெள்ளி 9. அலுமினியம் 10. இரும்பு 11. தங்கம் 12. செம்பு

பயிற்சி :- 13

# வினவுக் கேற்ப விடை எழுதுதல் I.

ஒவ்வொரு தொடரையும் கவனமாகப் படி. பின்னர் அத்தொடரின் கீழோ, அருகிலோ உள்ள காலி இடத்தில், அத்தொடருக் கேற்ற விடையை எழுது. விடைகளை அடியிற் காண்க.

**மாதிரி :—**

குட்டிப் போட்டுப் பால் கொடுக்கும் குடுட்டுப் பறவை ... ... துரிஞ்சில் (வௌவால்).

1 சேற்றில் மலரும் இரண்டு அழகிய மலர்கள் 1.............. 2..............

2 ஒரு நாளின் இரண்டு பகுதிகள் 1.............. 2..............

3 பன்னீர் இறக்க உதவும் மலர் ..............

4 நீரிலும் நிலத்திலும் வாழும் இரு உயிரிகள் 1.............. 2..............

5 குதித்துச் செல்லும் இரு உயிரிகள் 1.............. 2..............

6 குட்டிப் போட்டுப் பால் கொடுக்கும் இரண்டு நீர் வாழ் உயிரிகள் 1.............. 2..............

7 தேன் கூட்டைக் கலைத்துத் தேன் குடிக்கும் விலங்கு ..............

8 மூக்கிற் கொம்புள்ள விலங்கு ..............

9 ஒரு பகலின் மூன்று பகுதிகள் 1.............. 2.............. 3..............

10 ஒரு இரவின் மூன்று பகுதிகள் 1.............. 2.............. 3..............

## நிரப்ப வேண்டிய சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. முற்பகல் | 2. ரோஜாப்பூ | 3. நள்ளிரவு | 4. அல்லி |
| 5. பின்னிரவு | 6. தவளை | 7. நடுப்பகல் | 8. வாத்து |
| 9. பிற்பகல் | 10. தாமரை | 11. முன்னிரவு | 12. முயல் |
| 13. பகல் | 14. கரடி | 15. இரவு | 16. சுறா |
| 17. கங்காரு | 18. காண்டாமிருகம் | 19. திமிங்கிலம். | |

பயிற்சி :— 14

## வினுவுக் கேற்ப விடை எழுதுதல் II.

ஒவ்வொரு தொடரையும் கவனமாகப் படி. பின்னர், அத்தொடரின் கீழோ, அருகிலோ உள்ள காலி இடத்தில், அத்தொடருக்கேற்ற விடையை எழுது. விடைகளை அடியிற் காண்க.

**மாதிரி :—**

பகலிற் கண் தெரியாத பறவை எது ? ஆந்தை

1 இரவிற் கண் தெரியாத பறவை எது? ..............................

2 நீரில் நீந்தும் இரு உயிரிகள் யாவை? 1.............................. 2..............................

3 வளை தோண்டி வாழும் இரு உயிரிகள் யாவை? 1.............................. 2..............................

4 கூடு கட்டி வாழும் இரு பறவைகள் எவை? 1.............................. 2..............................

5 கூடு கட்டத் தெரியாத பறவை எது? ..............................

6 இறைச்சி தின்னும் இரு பறவைகள் எவை? 1.............................. 2..............................

7 பிடரி மயிர் உள்ள இரு விலங்குகள் யாவை? 1.............................. 2..............................

8 ஊன் தின்னும் இரு விலங்குகள் எவை? 1.............................. 2..............................

9 இரவில் இரை தேடும் இரு பறவைகள் யாவை? 1.............................. 2..............................

10 நிலவிற்குரிய இரு பருவங்கள் எவை? 1.............................. 2..............................

### நிரப்ப வேண்டிய சொற்கள்.

1. வளர்பிறை 2. காகம் 3. வௌவால் 4. முதலை 5. ஓநாய் 6. நண்டு 7. மீன் 8. தேய்பிறை 9. ஆந்தை 10. சிறுத்தை 11. குதிரை 12. கழுகு 13. கிளி 14. தூக்கணங் குருவி 15. எலி 16. சிங்கம் 17. வல்லூறு 18. வானம்பாடி

பயிற்சி :- 15

## செய்யும் தொழில் என்ன ?

கீழ்க்கண்ட ஒவ்வொருவரும் செய்யும் தொழிலைக் கூறு. விடைகள் அடியில் உள்ளன.

**மாதிரி :—**

அஞ்சற் காரர் கடிதங் கொடுப்பார்.

1 கருமார் ..............................

2 செம்மார் ..............................

3 செவிலியர் ..............................

4 ஆசிரியர் ..............................

5 ஊர் காவலர் ..............................

6 அரசினர் ..............................

7 மீகாமன் ..............................

8 பிடாரன் ..............................

9 ஒற்றர் ..............................

10 நீதிபதி ..............................

11 பாடகர் ..............................

12 பாவலர் ..............................

13 அங்காடிக்காரார் ____________________

14 மாணுக்கர் ____________________

15 வாயிற் காவலர் ____________________

16 மல்லர் ____________________

17 கன்னர் ____________________

18 பதிப்பாசிரியர் ____________________

19 வர்ண வேலை செய்பவர் ____________________

20 தகர வேலை செய்பவர் ____________________

## பொருத்த வேண்டிய விடைகள்.

1. உளவு பார்ப்பார் 2 பாம்பாட்டுவான் 3. வழக்கு விசாரிப்பார் 4 கப்பலோட்டுவான் 5. பாடுவார் 6. நாடாளுவர் 7. பாடல் இயற்றுவார் 8. நாட்டைக் காவல் புரிவர் 9 சாமான் விற்பார் 10. கற்பிப்பர் 11. கற்பர் 12. நோயாளிகளைக் கவனிப்பர் 13. வீட்டைக் காவல் செய்வர் 14. மிதியடிகள் செய்வர் 15 மற்போர் செய்வர் 16. இரும்புத் தொழில் செய்வர் 17. வாளிகள் செய்வார் 18. வர்ணம் பூசுவார் 19. நூல்களைப் பதிப்பிப்பார் 20. பித்தளைப் பாத்திரங்கள் செய்வர்.

பயிற்சி :– 16

# சிறிது – பெரிது

அடியிற் சில பொருள்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன ; அவற்றுள், எது எதனை விடப் பெரிது? எது எதனை விடச் சிறிது? என்பதைக் கோடிட்ட இடங்களில் எழுது.

**மாதிரி :–**

ஆடு மாட்டினும் ..... **சிறிது.**

குதிரை மாட்டினும் ..... **பெரிது.**

1 குதிரை ஒட்டகத்தினும் .....

2 யானை ஒட்டகத்தினும் .....

3 சிறுத்தை புலியினும் .....

4 சிங்கம் புலியினும் .....

5 எலி பெருச்சாளியினும் .....

6 பூனை பெருச்சாளியினும் .....

7 நாகப்பாம்பு உடும்பினும் .....

8 மலைப்பாம்பு உடும்பினும் .....

9 சிட்டுக்குருவி புறாவினும் .....

10 பருந்து புறாவினும் .....

11 மீன் முதலையினும் .....

12 திமிங்கிலம் முதலையினும் .....

13 கரும்பு மூங்கிலினும் .....

14 கமுகு மூங்கிலினும் .....

15 வாழை தென்னையினும் .....

16 ஆலமரம் தென்னையினும் .....

17 ரம்புத்தான் மங்குஸ்தீனினும் .....

18 டுரியான் மங்குஸ்தீனினும் .....

19 அரும்பு மலரினும் .....

20 கனி மலரினும் .....

பயிற்சி :– 17

## எது, எதற்குப் பகை?

உலகம் ஒரு போர்க்களம். இங்கு இடைவிடாமல் உயிர்களிடையே போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அமைதியான குணமுடைய உயிர்களைக் குரூர குணமுடைய உயிர்கள் கொன்று தின்கின்றன. இது உலக இயற்கை.

கீழ்க்கண்ட உயிர்களுள் எது, எதற்குப் பகையென்பதை அறிந்து, அவ்வவற்றிற்கு எதிரே எழுது. விடைகள் அடியிற் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாதிரி :–**

பாம்புக்குப் பகை ......கருடன்.......

எலிக்குப் பகை ......பூனை.......

1 எறும்புக்குப் பகை ..................

2 ஈக்குப் பகை ..................

3 கறையானுக்குப் பகை ..................

4 சிலந்திக்குப் பகை ..................

5 தேளுக்குப் பகை ..................

6 கோழிக்குப் பகை ..................

7 மானுக்குப் பகை ..................

8 காட்டுப்பன்றிக்குப் பகை ..................

9 கிளிக்குப் பகை ..................

10 பூனைக்குப் பகை ..................

11 ஆந்தைக்குப் பகை ..................

12 ஆட்டுக்குப் பகை ..................

13 முயலுக்குப் பகை ..................

14 கொக்குக்குப் பகை ..................

15 தவளைக்குப் பகை ..................

16 பாம்புக்குப் பகை ..................

### விடைகள்

1. வரிப்புலி 2. பூனை 3. நாய் 4. சிறுத்தை 5. ஓநாய் 6. வெருகு 7. கழுகு 8. கோழி 9. வல்லூறு 10. தேள் 11. பாம்பு 12. அழுங்கு 13. கீரி 14. பல்லி 15. காகம் 16. கரடி

பயிற்சி :- 18

# சொற்ருெடர்

ஒரு சொல் இன்னெரு சொல்லுடன் கூடுதல் *புணர்ச்சி* அல்லது *சொற்ருெடர்* எனப்படும்.

சொற்ருெடர் அல்லது புணர்ச்சிக்கு இரு மொழிகள் வேண்டும். ஒன்று *நிலைமொழி*; மற்ருென்று *வருமொழி*.

தக்காளி என்பது ஒரு சொல். பழம் என்பது இன்னெரு சொல். இவ்விரண்டு சொற்களும், '*தக்காளி + பழம் = தக்காளிப்பழம்*' என இணைந்து ஒரே சொற்ருெடராகின்றன.

இதில் தக்காளி என்பது முந்திய மொழி; பழம் என்பது பிந்திய மொழி. முந்திய மொழியை *நிலைமொழி* என்பர். பிந்திய மொழியை **வருமொழி** என்பர்.

முதலில் உள்ள மொழியே *நிலைமொழி*. நிலைமொழியோடு வந்து கூடுகின்ற, அல்லது சேர்ந்து கலக்கின்ற மொழியே *வருமொழி*.

புணர்ச்சி அல்லது சொற்ருெடர் நான்குவகைப்படும். ஒன்று **இயல்புச் சொற்ருெடர்**. இன்னென்று, **தோன்றல் சொற்ருெடர்**. வேருென்று, **திரிதல் சொற்ருெடர்**. பிறிதொன்று, **கெடுதல் சொற்ருெடர்**.

**விடை கூறு.**

1 சொற்ருெடர் என்பது யாது ?

..............................................................................

..............................................................................

2 ஒரு சொற்ருெடர் அமைய என்ன வேண்டும் ?

..............................................................................

..............................................................................

3 நிலைமொழி என்பது என்ன ?

..............................................................................

..............................................................................

4 வருமொழி என்பது யாது ?

..............................................................................

..............................................................................

5 சொற்ருெடர் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

..............................................................................

..............................................................................

பயிற்சி :- 19

# இயல்புச் சொற்றொடர் I.

இயல்பு என்பது இயற்கை எனப் பொருள்படும். மாறுதலில்லாத ஒன்றையே இயற்கை என்பர்.

மண் என்பது ஒரு சொல். மேடு என்பது வேறொரு சொல். இவ்விரு சொற்களையும் ஒரே தொடராக்க, அவற்றை **மண் + மேடு** எனப் புணர்த்த வேண்டும்.

மண், மேடு என்னும் இச் சொற்கள், **மண் + மேடு = மண்மேடு** என ஒரே தொடரான பின்னரும் மாறுதலின்றி இருக்கின்றன.

இவ்வாறு, இரு சொற்கள் ஒன்றோடொன்று இணைந்தும், எவ்வகை மாறுதலும் அடையாமல் இயல்பாய் இருக்குமானால், அத் தொடரை **இயல்புத் தொடர்** அல்லது **இயல்புச் சொற்றொடர்** என்பர்.

கீழ்க்கண்ட சொற்களை இயல்புச் சொற்றொடர் ஆக்கு.

**மாதிரி :–**

ஆட்சி + முறை = ஆட்சிமுறை.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | எலி | + வளை | = | ............................ | | 11 | கலை | + | வளம் | = | ............................ |
| 2 | குப்பை | + மேடு | = | ............................ | | 12 | மலை | + | மகள் | = | ............................ |
| 3 | தை | + மாதம் | = | ............................ | | 13 | மலை | + | நாடு | = | ............................ |
| 4 | காந்தி | + மதி | = | ............................ | | 14 | மலை | + | மேடு | = | ............................ |
| 5 | புதன் | + கிழமை | = | ............................ | | 15 | ஒரு | + | வீடு | = | ............................ |
| 6 | விடு | + கதை | = | ............................ | | 16 | தமிழ் | + | மொழி | = | ............................ |
| 7 | குரு | + குலம் | = | ............................ | | 17 | தமிழ் | + | மக்கள் | = | ............................ |
| 8 | ஆடு | + மாடு | = | ............................ | | 18 | தமிழ் | + | நாடு | = | ............................ |
| 9 | புல் | + வெளி | = | ............................ | | 19 | தாய் | + | வீடு | = | ............................ |
| 10 | கலை | + மகள் | = | ............................ | | 20 | அணி | + | கலன் | = | ............................ |

பயிற்சி :– 20

# இயல்புச் சொற்றொடர் II.

அடியிற்கண்ட இயல்புச் சொற்றொடர்களைப் பிரித்தெழுது.

**மாதிரி :-**

தாய்மொழி = தாய் + மொழி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மான்கன்று | = | ........................ | 11 | ஊர்மன்றம் | = | ........................ |
| 2 | தளிர்மேனி | = | ........................ | 12 | ஊறுபாடு | = | ........................ |
| 3 | முள்வேலி | = | ........................ | 13 | எடுபடுதல் | = | ........................ |
| 4 | புழுதிமண் | = | ........................ | 14 | ஈடுபாடு | = | ........................ |
| 5 | ஆதிமூலம் | = | ........................ | 15 | எதிர்வழக்கு | = | ........................ |
| 6 | ஆதிபகவன் | = | ........................ | 16 | ஒருமுகம் | = | ........................ |
| 7 | இறைமொழி | = | ........................ | 17 | கடைநிலை | = | ........................ |
| 8 | உயிர்நிலை | = | ........................ | 18 | கானல்வரி | = | ........................ |
| 9 | உயிர்மெய் | = | ........................ | 19 | தமிழ்மாலை | = | ........................ |
| 10 | உரைகல் | = | ........................ | 20 | தலைமுடி | = | ........................ |

பயிற்சி :- 21

# தோன்றல் சொற்றொடர் I.

தோன்றல் என்றால், **உண்டாதல், காணப்படுதல், பிறத்தல்** எனப் பொருள்படும்.

உணவு பொருள் என்பன போலத் தனித்தனியாய் உள்ள இரு சொற்கள் ஒன்றாய்ச் சேர்ந்து, **உணவுப்பொருள்** என ஒரே தொடராவதுண்டு.

அவ்வாறு ஒரே தொடராகும் சொற்களுக்கிடையில், **'க், ங், ச், ஞ், த், ந், ப், ம்'** என்னும் எட்டு மெய் எழுத்துக்களுள் ஏதேனும் ஒன்று தோன்றும்.

இரு சொற்களிடையே மெய் எழுத்துத் தோன்றலையுடைய சொற்றொடருக்குத் **தோன்றல் சொற்றொடர்** என்பது பெயர்.

அடியிற் கண்ட சொற்களின் இடையே ஏற்ற மெய் எழுத்துக்களைப் பொருத்தித் தோன்றல் சொற்றொடர்களாக்கு.

**மாதிரி :–**

தை + பொங்கல் = தைப்பொங்கல்.

1 சிவப்பு + சாயம் ..............................

2 துவர்ப்பு + காய் ..............................

3 கை + பிடி ..............................

4 யானை + பாகன் ..............................

5 போர் + படை ..............................

6 கரும்பு + தோட்டம் ..............................

7 குடிசை + தொழில் ..............................

8 கோரை + பாய் ..............................

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | கோரை | + | புல் | = | ........................................ |
| 10 | பள்ளி | + | கூடம் | | ........................................ |
| 11 | பயிர் | + | தொழில் | | ........................................ |
| 12 | சத்து | + | பொருள் | | ........................................ |
| 13 | உயிர் | + | தியாகம் | | ........................................ |
| 14 | காய்கறி | + | செடி | | ........................................ |
| 15 | வண்டி | + | பாதை | | ........................................ |
| 16 | வழி | + | போக்கர் | | ........................................ |
| 17 | கோடை | + | காலம் | | ........................................ |
| 18 | உழவு | + | தொழில் | | ........................................ |
| 19 | நிலை | + | கண்ணாடி | | ........................................ |
| 20 | செயற்கை | + | பொருள் | | ........................................ |

பயிற்சி :— 22

# தோன்றல் சொற்றெடர் II.

அடியிற்கண்ட தோன்றல் சொற்றெடர்களைப் பிரித்தெழுது.

**மாதிரி :—**

பிஞங்குத்துறைமுகம் = பிஞங்கு + துறைமுகம்

1 ஆண்டுத்தேர்வு ..........................................
2 அணைக்கட்டு ..........................................
3 கடைச்சங்கம் ..........................................
4 போர்த்தொழில் ..........................................
5 போர்த்திறமை ..........................................
6 ஏழைப்பிள்ளை ..........................................
7 ஓலைக்குருத்து ..........................................
8 தைத்திங்கள் ..........................................
9 கத்தரிச்செடி ..........................................
10 பூப்பூக்கும் ..........................................
11 நெசவுத்தொழில் ..........................................
12 குடிமைப்பயிற்சி ..........................................
13 காப்பிக்கொட்டை ..........................................
14 கைத்தறி ..........................................
15 கைத்தடி ..........................................
16 பருத்திப்பஞ்சு ..........................................
17 மலைத்தொடர் ..........................................
18 தமிழ்ச்சொல் ..........................................
19 நீர்ப்பாசனம் ..........................................
20 இயற்கைக்காட்சி ..........................................

பயிற்சி :- 23

# தோன்றல் சொற்றொடர் III.

தோன்றல் சொற்றொடருள் இது வேறொரு வகை. இதில், முதலில் உள்ள சொற்களின் இடையே ஏற்ற மெய் எழுத்துக்களைப் பொருத்தித் தோன்றல் சொற்றொடர்களாக்கு.

**மாதிரி :-**

ஆறு + வளம் = ஆற்றுவளம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | காடு | + | வாழ்க்கை | ........................ |
| 2 | காடு | + | மனிதர் | ........................ |
| 3 | காடு | + | விலங்கு | ........................ |
| 4 | காடு | + | பறவை | ........................ |
| 5 | காடு | + | செடி | ........................ |
| 6 | நாடு | + | மனிதர் | ........................ |
| 7 | நாடு | + | வாழ்க்கை | ........................ |
| 8 | நாடு | + | விலங்கு | ........................ |
| 9 | நாடு | + | பறவை | ........................ |
| 10 | நாடு | + | பழக்கம் | ........................ |
| 11 | நாடு | + | புறம் | ........................ |
| 12 | நாடு | + | வளம் | ........................ |
| 13 | வீடு | + | பறவை | ........................ |
| 14 | வீடு | + | விலங்கு | ........................ |
| 15 | வீடு | + | மனிதர் | ........................ |

பயிற்சி :— 24

# தோன்றல் சொற்ருெடர் IV.

அடியிற் கண்ட தோன்றல் சொற்ருெடர்களைப் பிரித்தெழுது.

**மாதிரி :—**

முரட்டுமனிதர் = முரடு + மனிதர்.

1 சேற்றுநிலம் ........................................

2 மேட்டுநிலம் ........................................

3 வேற்றுமனிதர் ........................................

4 ஆற்றுப்பாய்ச்சல் ........................................

5 ஆற்றுமணல் ........................................

6 வயிற்றுக்கடுப்பு ........................................

7 நாட்டுநடப்பு ........................................

8 ஆட்டுப்பால் ........................................

9 மாட்டுப்பால் ........................................

10 ஆட்டுமந்தை ........................................

11 மாட்டுமந்தை ........................................

12 முரட்டுக்குணம் ........................................

13 சூட்டுக்கோல் ........................................

14 கயிற்றுப்பாய் ........................................

15 கயிற்றுக்கட்டில் ........................................

பயிற்சி :- 25

# திரிதல் சொற்றொடர் I.

திரிதல் என்ற சொல்லுக்கு *மாறுபடுதல்* என்பது பொருள்.

***கல், பாறை*** என்னும் இரு சொற்களைக் கவனி. இவை, ***கல் + பாறை = கற்பாறை*** என ஒரே தொடராகியிருக்கின்றது. இத்தொடரில், ***ல்*** என்னும் மெய் எழுத்து, ***ற்*** என்னும் மெய் எழுத்தாகத் திரிந்துள்ளது.

இவ்வாறு ஓர் எழுத்து, இன்னொரு எழுத்தாக மாறுபடுகின்ற – திரிதலை யடைகின்ற தொடர், ***திரிதல் சொற்றொடர்*** எனப் பெயர்பெறும்.

அடியிற்கண்ட சொற்களைச் சேர்த்துத் ***திரிதல் சொற்றொடர்***களாக்கு.

**மாதிரி :—**

நாவல் + பழம் = நாவற் பழம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கால் | + | சிலம்பு | .................... |
| 2 | கால் | + | பெருவிரல் | .................... |
| 3 | காவல் | + | கூடம் | .................... |
| 4 | காவல் | + | சேனை | .................... |
| 5 | காவல் | + | காடு | .................... |
| 6 | மேல் | + | படிப்பு | .................... |
| 7 | மேல் | + | படி | .................... |
| 8 | சேவல் | + | கோழி | .................... |
| 9 | சேவல் | + | கொண்டை | .................... |
| 10 | சேவல் | + | கொடி | .................... |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | நாணல் | + | காடு | = | ........................ |
| 12 | நால் | + | மணிமாலை | | ........................ |
| 13 | நால் | + | மறை | | ........................ |
| 14 | நால் | + | கவி | | ........................ |
| 15 | நால் | + | காலி | | ........................ |
| 16 | நால் | + | பால் | | ........................ |
| 17 | நால் | + | கோணம் | | ........................ |
| 18 | நால் | + | பொருள் | | ........................ |
| 19 | நால் | + | முகன் | | ........................ |
| 20 | நால் | + | படை | | ........................ |

பயிற்சி :- 26

## திரிதல் சொற்ருெடர் II.

அடியிற்கண்ட திரிதல் சொற்ருெடர்களைப் பிரித்தெழுது.

**மாதிரி :-**

பாற் சோறு = பால் + சோறு

1 நின்ருற் போல ..................

2 நூற் குற்றம் ..................

3 நூன் மடந்தை ..................

4 நூன்முகம் ..................

5 பகற் காலம் ..................

6 பகற் குருடு ..................

7 பாகற்கொடி ..................

8 பாற்காவடி ..................

9 பான் மயக்கம் ..................

10 பிற்பலம் ..................

11 மட்கலம் ..................

12 சொற்பயிற்சி ..................

13 முற்கூறு ..................

14 முற்படுதல் ..................

15 முற்பக்கம் ..................

16 மேன்மாடம் ..................

17 மேன்மக்கள் ..................

18 மேற்கோப்பு ..................

19 வன்மனம் ..................

20 வேற்படை ..................

பயிற்சி :— 27

# கெடுதல் சொற்றொடர் I.

கெடுதல் என்றால், நீங்குதல், மறைதல் எனப் பொருள்படும்.

**வானம், வில்** என்னும் இச்சொற்களைக் கவனி. இவை இரண்டும் சேர்ந்து, **வானம் + வில்** = **வானவில்** என ஒரே தொடராகும் போது, 'ம்' என்னும் மெய் எழுத்து மறைந்து விடுகின்றது. இவ்வாறு (மறைதலையுடைய) கெடுதலை யுடைய சொற்றொடர், **கெடுதல் சொற்றொடர்** எனப் பெயர் பெறும்.

அடியிற் கண்ட சொற்களைச் சேர்த்துக் **கெடுதல் சொற்றொடர்** ஆக்கு.

**மாதிரி :—**

மரம் + வேர் = ***மரவேர்.***

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நிலம் | + | வளம் | ........................ |
| 2 | மணம் | + | மகன் | ........................ |
| 3 | பாடம் | + | நூல் | ........................ |
| 4 | புத்தகம் | + | நிலையம் | ........................ |
| 5 | கோபம் | + | தாபம் | ........................ |
| 6 | பரிதாபம் | + | நிலை | ........................ |
| 7 | வீரம் | + | தீரம் | ........................ |
| 8 | காரம் | + | சாரம் | ........................ |
| 9 | பாலர் | + | பாடம் | ........................ |
| 10 | நாசம் | + | வேலை | ........................ |
| 11 | பாசம் | + | வலை | ........................ |
| 12 | காசம் | + | நோய் | ........................ |
| 13 | பாதம் | + | காணிக்கை | ........................ |
| 14 | பேதம் | + | புத்தி | ........................ |
| 15 | அவசரம் | + | புத்தி | ........................ |
| 16 | கண்டம் | + | சரம் | ........................ |
| 17 | கானம் | + | ரசம் | ........................ |
| 18 | சீதம் | + | பேதி | ........................ |
| 19 | இராகம் | + | மாலிகை | ........................ |
| 20 | தாகம் | + | சாந்தி | ........................ |

பயிற்சி :- 28

# கெடுதல் சொற்ருெடர் II.

அடியிற்கண்ட கெடுதல் சொற்ருெடர்களைப் பிரித்தெழுது.

**மாதிரி :—**

தேகநலம் = **தேகம் + நலம்**

1 தேகசுகம் ..........

2 ஞானநூல் ..........

3 நாடகநூல் ..........

4 மனநூல் ..........

5 கானசரசுவதி ..........

6 கோணமானி ..........

7 வீரமங்கை ..........

8 சிங்களமக்கள் ..........

9 மங்கலநாள் ..........

10 காலவேறுபாடு ..........

11 பாடமாறுதல் ..........

12 துன்பநாள் ..........

13 இன்பமொழி ..........

14 ஞாபகசக்தி ..........

15 செல்வநிலை ..........

16 சமவெளி ..........

17 வாசமலர் ..........

18 அமுதமொழி ..........

19 வானவெளி ..........

20 சித்திரவேலை ..........

பயிற்சி :– 29

## எண்ணுப் பெயர்களைச் சேர்த்து எழுதுதல்.

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள எண்ணுப் பெயர்களைச் சேர்த்து எழுதிய விடை அடியிற் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவை ஒவ்வொன்றையும் ஏற்ற இடத்தில் நிரப்பு.

**மாதிரி :–**

ஒன்று + ஒன்று = **ஒவ்வொன்று**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | இரண்டு | + | இரண்டு | ........ |
| 2 | மூன்று | + | மூன்று | ........ |
| 3 | நான்கு | + | நான்கு | ........ |
| 4 | ஐந்து | + | ஐந்து | ........ |
| 5 | ஏழு | + | ஏழு | ........ |
| 6 | பத்து | + | பத்து | ........ |
| 7 | பத்து | + | ஒன்று | ........ |
| 8 | பத்து | + | இரண்டு | ........ |
| 9 | பத்து | + | ஆறு | ........ |
| 10 | பத்து | + | எட்டு | ........ |
| 11 | இரண்டு | + | பத்து | ........ |
| 12 | நான்கு | + | பத்து | ........ |
| 13 | ஆறு | + | பத்து | ........ |
| 14 | எட்டு | + | பத்து | ........ |
| 15 | ஒன்பது | + | பத்து | ........ |

### நிரப்ப வேண்டிய சொற்கள்

1. தொண்ணூறு 2. இரண்டிரண்டு 3. எண்பது 4. மும்மூன்று 5. அறுபது 6. நந்நான்கு 7. நாற்பது 8. ஐயைந்து 9. இருபது 10. எவ்வேழு 11. பதினெட்டு 12. பப்பத்து 13. பதினாறு 14. பன்னிரண்டு 15. பதினொன்று.

பயிற்சி :– 30

## எண்ணுப் பெயர்களைப் பிரித்து எழுதுதல்.

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள எண்ணுப் பெயர்களைப் பிரித்தெழுதிய விடை அடியில் தரப்பட்டிருக்கின்றது. அவை ஒவ்வொன்றையும் ஏற்ற இடத்தில் நிரப்பு.

**மாதிரி :–**

பதினேழு = **பத்து + ஏழு**

1 பதின்மடங்கு ..............................

2 இருநூறு ..............................

3 முந்நூறு ..............................

4 நானூறு ..............................

5 ஐந்நூறு ..............................

6 அறுநூறு ..............................

7 எண்ணூறு ..............................

8 தொளாயிரம் ..............................

9 ஓராயிரம் ..............................

10 ஈராயிரம் ..............................

11 மூவாயிரம் ..............................

12 நாலாயிரம் ..............................

13 ஐயாயிரம் ..............................

14 எண்ணுயிரம் ..............................

15 பதினுயிரம் ..............................

### நிரப்ப வேண்டிய சொற்கள்.

1. பத்து + மடங்கு 2. ஒன்பது + நூறு 3. பத்து + ஆயிரம் 4. இரண்டு + நூறு
5. எட்டு + ஆயிரம் 6. மூன்று + நூறு 7. ஐந்து + ஆயிரம் 8. நான்கு + நூறு
9. நான்கு + ஆயிரம் 10. ஐந்து + நூறு 11. மூன்று + ஆயிரம் 12. ஆறு + நூறு
13. இரண்டு + ஆயிரம் 14. எட்டு + நூறு 15. ஒன்று + ஆயிரம்

பயிற்சி :– 31

## எண்ணுப் பெயர்களைச் சேர்த்து எழுதுதல்.

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள எண்ணுப் பெயர்களைச் சேர்த்தெழுதிய விடை அடியிற் கொடுக்கப்படிருக்கின்றது. அவை ஒவ்வொன்றையும் ஏற்ற இடத்தில் நிரப்பு.

**மாதிரி :–**

மூன்று + தமிழ் = **முத்தமிழ்**

1 மூன்று + கடல் ..........

2 மூன்று + கண்ணன் ..........

3 மூன்று + கனி ..........

4 மூன்று + காலம் ..........

5 மூன்று + கால் ..........

6 மூன்று + தொழில் ..........

7 மூன்று + நீர் ..........

8 மூன்று + நூல் ..........

9 மூன்று + பகை ..........

10 மூன்று + பட்டை ..........

11 மூன்று + பொருள் ..........

12 மூன்று + பால் ..........

13 மூன்று + மணி ..........

14 மூன்று + மலம் ..........

15 மூன்று + மலை ..........

### நிரப்ப வேண்டிய சொற்கள்.

1. முந்நூல் 2. மும்மலை 3. முக்கடல் 4. மும்மலம் 5. முக்கண்ணன் 6. மும்மணி 7. முக்கனி 8. முப்பால் 9. முக்காலம் 10. முப்பொருள் 11. முக்கால் 12. முப்பட்டை 13. முத்தொழில் 14. முப்பகை 15. முந்நீர்.

பயிற்சி :- 32

## எண்ணுப் பெயர்களைப் பிரித்து எழுதுதல்.

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள எண்ணுப் பெயர்களைப் பிரித்து எழுதிய விடை அடியில் தரப்பட்டிருக்கின்றது. அவை ஒவ்வொன்றையும் ஏற்ற இடத்தில் நிரப்பு.

**மாதிரி :-**

நானிலம் = *நான்கு + நிலம்*

1 நாற்காலி ..............................

2 நாற்பால் ..............................

3 நாற்படை ..............................

4 நாற்கோணம் ..............................

5 ஐங்குரவர் ..............................

6 ஐந்தெழுத்து ..............................

7 எண்குணம் ..............................

8 எண்பொருள் ..............................

9 எண்கோணம் ..............................

10 இருவர் ..............................

11 மூவர் ..............................

12 நால்வர் ..............................

13 ஐவர் ..............................

14 அறுவர் ..............................

15 எண்மர் ..............................

16 பதின்மர் ..............................

### நிரப்ப வேண்டிய சொற்கள்.

1. பத்து + மனிதர் 2. நான்கு + காலி 3. எட்டு + மனிதர் 4. நான்கு + பால் 5. ஆறு + மனிதர் 6. நான்கு + கோணம் 7. ஐந்து + மனிதர் 8. ஐந்து + குரவர் 9. நான்கு+மனிதர் 10. ஐந்து+எழுத்து 11. மூன்று+மனிதர் 12. எட்டு+குணம் 13. இரண்டு+மனிதர் 14. எட்டு+பொருள் 15. நான்கு+படை 16. எட்டு+கோணம்

பயிற்சி :- 33

# சொற்களை நிறைவு செய்தல்

அடியிலுள்ள ஒவ்வொரு சொல்லும் ஐந்து எழுத்துக்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லின் இடையிலும் மூன்று எழுத்துக்கள் காணப்படவில்லை. முதலிலும் கடைசியிலும் உள்ள இரண்டெழுத்துக்களைக் கொண்டு, நடுவே விடப்பட்டுள்ள எழுத்துக்களைக் கண்டு பிடித்து எழுது. உன்னுடைய விடை சரிதானா என்பதை நீ அறிந்து கொள்ளப் பூர்த்திசெய்ய வேண்டிய ஒவ்வொரு சொல்லின் பொருளும் அதனருகே அடைப்புக் குறியினுள் தரப்பட்டுள்ளது.

**மாதிரி :-**

அ................ம்.

அ ஞ் ச ன ம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | அ....................ளை | (மாளிகை) | 21 | அ....................ம் | (மதிப்புக் குறைவு) |
| 2 | இ....................ம் | (அருள்) | 22 | பு....................ம் | (நூல்) |
| 3 | உ....................ம் | (துயில்) | 23 | சி....................ம் | (படம்) |
| 4 | ஓ....................ல் | (ஓய்வு) | 24 | த....................ன் | (தந்தை) |
| 5 | கா....................ல் | (நோய்) | 25 | ஈ....................ன் | (சிவன்) |
| 6 | ச....................ம் | (வெகுமதி) | 26 | உ....................ம் | (மரியாதை) |
| 7 | தா....................ம் | (வீட்டின் இறப்பு) | 27 | உ....................ம் | (விரதம்) |
| 8 | மீ....................தி | (பறவை) | 28 | கீ....................பு | (நாச வேலை) |
| 9 | ந....................பா | (நளன் கதை) | 29 | கு....................ம் | (கலகம்) |
| 10 | கு....................சி | (குறத்தி) | 30 | தி....................பு | (இனிப்பு) |
| 11 | ம....................ன் | (மாப்பிள்ளை) | 31 | தீ....................ம் | (முடிவு) |
| 12 | உ....................ம் | (நல்லுரை) | 32 | நா....................ம் | (மரியாதை) |
| 13 | ம....................ம் | (நிலம்) | 33 | க....................ன் | (சூரியன்) |
| 14 | த....................ரை | (தாமரை) | 34 | பா....................ம் | (மணற்காடு) |
| 15 | அ....................ம் | (தாமரை) | 35 | பி....................ல் | (பின் நேரம்) |
| 16 | த....................ம் | (சுயநலம்) | 36 | பு....................ம் | (நல்வினை) |
| 17 | செ....................ர் | (ஞாயிறு) | 37 | பொ....................ம் | (தகுதி) |
| 18 | ம....................ளை | (கொம்பு) | 38 | ம....................ம் | (இசைக்கருவி) |
| 19 | ஆ....................கு | (பெண்) | 39 | மு....................ம் | (காய்ச்சல்) |
| 20 | கீ....................சை | (கிழக்கு) | 40 | வி....................ம் | (சிறப்பு) |

பயிற்சி :- 34

# அடுக்கு மொழிகள்.

ஆடுகள் **மந்தை மந்தை**யாக மேய்கின்றன. இத்தொடரில் வந்துள்ள, ‘மந்தை’ என்பது ஆடுகளின் தொகுதியைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகும்.

இங்கு மந்தை என்பது ஒருமுறை மட்டுமின்றி, ‘மந்தை மந்தை’ என இருமுறை கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒரு பெயர்ச் சொல்லை இருமுறை அடுக்கிக் கூறுவது, **‘அடுக்குத் தொடர்’** அல்லது **‘அடுக்கு மொழிகள்’** எனப்படும்.

அடியிற் கோடிடப்பெற்ற இடங்களில் ஏற்ற அடுக்கு மொழிகளை எழுது. எழுத வேண்டிய அடுக்கு மொழிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**மாதிரி :—**

செடியில் மலர் **கொத்துக்கொத்தாய்** மலர்ந்தது.

1 மனிதர் .................................... நின்றனர்.

2 பறவைகள் ....................................ப் பறந்தன.

3 திராட்சை ....................................யாய்க் காய்த்தது.

4 எறும்புகள் ....................................யாய் ஊர்ந்தன.

5 வீரர்கள் ....................................யாய் நின்றனர்.

6 வளையல் ....................................யாய் விற்கப்படுகிறது.

7 யானைகள் ....................................யாய் வாழும்.

8 டுரியான் ....................................க் கிடக்கிறது.

9 திருடன் பிரயாணியை .................... என அதட்டினான்.

10 கன்றுகளை ....................................யாய் நடுவார்கள்.

11 பசு .................................... எனக் கதறுகிறது.

12 பிள்ளைகள் .................................... எனப் பயந்து கூச்சலிட்டனர்.

## நிரப்ப வேண்டிய தொடர்கள்.

1. மந்தை மந்தை 2. சோடி சோடி 3. குவியல் குவியலாய் 4. அணி அணி 5. நில் நில் 6 சாரை சாரை 7. வரிசை வரிசை 8. குலை குலை 9. அம்மா அம்மா 10. கூட்டங் கூட்டமாய் 11. பூரான் பூரான் 12. கும்பல் கும்பலாய்.

பயிற்சி :- 35

# அடுக்குத் தொடர்கள்.

முதலாம் வரிசையிலுள்ள அடுக்குத் தொடர்களை, இரண்டாம் வரிசையில் உள்ள காலி இடங்களிற் பொருத்தமாக நிரப்பு.

**மாதிரி :-**

மகன் பாடசாலைக்குப் போக நேரமானதைக் கண்ட தாயார், ஓடு ஓடு என்று அவனைத் துரிதப்படுத்தினார்.

## முதலாம் வரிசை.

1. இரு இரு 2. பாம்பு பாம்பு 3. நிறுத்து நிறுத்து 4. திருடன் திருடன் 5. விடு விடு 6. கொலை கொலை 7. விலகு விலகு 8. நட நட 9. எழுதுங்கள் எழுதுங்கள் 10. அம்மா அம்மா 11. படி படி 12. ஏறு ஏறு 13 உண் உண் 14. திரும்பு திரும்பு 15. பார் பார்

## இரண்டாம் வரிசை.

1 நாகத்தைக் கண்ட சிறுவன் ............................................ என்று அலறினான்.

2 இருளில் ஆள் அரவத்தைக் கேட்ட காவலாளி ............................................ என்று கூச்சலிட்டான்.

3 கொள்ளைக்காரன் ஒருவனைக் கத்தியாற் குத்துவதைக் கண்ட வழிப்போக்கன் ............................................ என்று அலறினான்.

4 சாலையோரத்திற் சிறுநீர் பெய்தவனைப் பிடித்த ஊர் காவலர் அவனிடம் காவல் நிலையத்தை நோக்கி ............................................ என்றார்.

5 வயிறு பசித்த குழந்தை ............................................ என்று அழத் தொடங்கிற்று.

6 புகைவண்டி நிலையத்தை அடைந்ததும் பின்னால் நின்ற பிரயாணிகள் முன்னால் நின்றவர்களை ............................................ என்று நெருக்கினர்.

7 உள்ளன்பு இல்லாதவர் ............................................ என்றாலும் உண்ணக்கூடாது.

8 இரவு நேரத்திற் பெற்றோர் வீட்டுப் பாடத்தைப் ............................................ என்று மகனைத் தூண்டினர்.

9 தேர்வுக்குரிய நேரம் முடியப் போவதை அறிந்த ஆசிரியர், மாணவர்களை நோக்கி, விரைவாக ........................................... என்றார்.

10 வழியை மறித்துக் கொண்டு நின்றவனைப் பார்த்த ஒருவர் வழியை விட்டு ........................................... என்று கூறினார்.

11 பறவைக் குஞ்சை வைத்திருக்கும் குறும்புக்காரனைப் பார்த்த பெரியவர் அதனை ........................................... என்று சொன்னார்.

12 வழி மாறிச் சென்ற வண்டியோட்டியைப் பார்த்த ஊர் காவலர் ........................................... என்று கையை அசைத்தார்.

13 ஆசிரியரைக் கண்டு எழுந்த மாணவனை ஆசிரியர் ........................................... என்றார்.

14 உடற்பயிற்சியின் போது ஆசிரியர் இடமும் வலமும் ........................................... என்றார்.

15 பட்டம் வெகு தொலைவில் பறப்பதைக் கண்ட பையன் ........................................... என்று மகிழ்ச்சியாற் குதித்தான்.

பயிற்சி :– 36

# வேறு இரு பொருள் கூறுதல்

அடியில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் வேறு இரு பொருள் கூறு. நீ, கூறும் இரு பொருளில் ஒன்று பெயர்ச் சொல்லாகவும், மற்றொன்று வினைச் சொல்லாகவும் இருக்க வேண்டும். எழுத வேண்டிய வினைச் சொற்களும், பெயர்ச் சொற்களும் தனித்தனியே கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலிருந்தும் பொருத்தமான ஒவ்வொரு சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.

**மாதிரி :–**

'செல்'

செல் = கறையான் — **பெயர்ச்சொல்.**
செல் = போ — **வினைச்சொல்.**

| | வினைச்சொற்கள் | பெயர்ச்சொற்கள் |
|---|---|---|
| 1 அணி | ............ | ............ |
| 2 ஒளி | ............ | ............ |
| 3 துணி | ............ | ............ |
| 4 ஏறு | ............ | ............ |
| 5 கரை | ............ | ............ |
| 6 கல் | ............ | ............ |
| 7 புகழ் | ............ | ............ |
| 8 பரப்பு | ............ | ............ |
| 9 பற்று | ............ | ............ |
| 10 வளை | ............ | ............ |

## நிரப்ப வேண்டிய பெயர்ச்சொற்கள்

1. பாறை 2. எல்லை. 3. கீர்த்தி. 4. காளை. 5. அகலம். 6. ஆடை. 7. அன்பு. 8. வெளிச்சம். 9. வளையல். 10. வரிசை.

## நிரப்ப வேண்டிய வினைச்சொற்கள்

1. தோண்டு. 2. கரைத்து விடு. 3. புகழு. 4. மேலே செல். 5. பரவச்செய். 6. துண்டாக்கு. 7. பிடி. 8. மறைத்து வை. 9. தடை செய். 10. தரி.

பயிற்சி :- 37

# ஒரே ஓசைப் பெயர்ச் சொற்கள் I.

குண்டு – சுண்டு – துண்டு என்னும் பெயர்ச் சொற்கள் ஒன்றற்கொன்று பொருள் வேறுபாடு கொண்டவை. எனினும் ஒரே வகையான குறுகிய ஓசையை உடையவை. இவ்வாறு, குறுகிய ஓசையினையுடைய சொற்கள் 'குறில்' எனப் பெயர் பெறும்.

முதலாம் வரிசையிலுள்ள ஒவ்வொரு குறுகிய ஓசைச் சொல்லுக்கும், அதே ஓசையினுடைய வேறு மூன்று சொற்கள் தரப்பட்டுள்ளன. ஆனால், அவற்றின் முதலாம் எழுத்துக்கள் காணப்படவில்லை. காணப்பெறாத அவ்வெழுத்துக்களைக் கண்டுபிடித்துப் பொருத்தமான, குறுகிய ஓசைப் பெயர்ச் சொற்களாக்கு.

**மாதிரி :–**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அண்டம் | கண்டம் | தண்டம் | பண்டம் |
| 2 | அன்னம் | கன்னம் | சன்னம் | வன்னம் |
| 3 | அகரம் | தகரம் | நகரம் | மகரம் |
| 4 | கொக்கு | சொக்கு | தொக்கு | பொக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அகடு | .... கடு | .... கடு | .... கடு |
| 2 | அங்கு | .... ங்கு | .... ங்கு | .... ங்கு |
| 3 | அங்கை | .... ங்கை | .... ங்கை | .... ங்கை |
| 4 | அடம் | .... டம் | .... டம் | .... டம் |
| 5 | அட்டை | .... ட்டை | .... ட்டை | .... ட்டை |
| 6 | அதம் | .... தம் | .... தம் | .... தம் |
| 7 | அந்தி | .... ந்தி | .... ந்தி | .... ந்தி |
| 8 | அன்று | .... ன்று | .... ன்று | .... ன்று |
| 9 | அகரம் | .... கரம் | .... கரம் | .... கரம் |
| 10 | அங்கம் | .... ங்கம் | .... ங்கம் | .... ங்கம் |
| 11 | அந்தம் | .... ந்தம் | .... ந்தம் | .... ந்தம் |
| 12 | எட்டி | .... ட்டி | .... ட்டி | .... ட்டி |
| 13 | எட்டு | .... ட்டு | .... ட்டு | .... ட்டு |
| 14 | கட்டி | .... ட்டி | .... ட்டி | .... ட்டி |
| 15 | கட்டு | .... ட்டு | .... ட்டு | .... ட்டு |
| 16 | கம்பி | .... ம்பி | .... ம்பி | .... ம்பி |
| 17 | கனம் | .... னம் | .... னம் | .... னம் |
| 18 | குண்டு | .... ண்டு | .... ண்டு | .... ண்டு |
| 19 | கடிப்பு | .... டிப்பு | .... டிப்பு | .... டிப்பு |
| 20 | கட்டம் | .... ட்டம் | .... ட்டம் | .... ட்டம் |

பயிற்சி :- 38

# ஒரே ஓசைப் பெயர்ச் சொற்கள் II.

ஆரணன் - காரணன் - சாரணன் என்னும் பெயர்ச் சொற்கள், வெவ்வேறு பொருள் கொண்டவை எனினும், ஒரே வகையான நெடிய ஓசையினை உடையவை. இவ்வாறு, நெடிய ஓசையினையுடைய சொற்கள் 'நெடில்' எனப் பெயர் பெறும்.

முதலாம் வரிசையிலுள்ள ஒவ்வொரு நீண்ட ஓசைச் சொல்லுக்கும், அதே ஓசையுடைய வேறு மூன்று சொற்கள் தரப்பட்டுள்ளன. ஆனால், அவற்றின் முதலாம் எழுத்துக்கள் காணப்படவில்லை. காணப்படாத அவ் வெழுத்துக்களைக் கண்டு பிடித்துப் பொருத்தமான, நெடிய ஓசைப் பெயர்ச் சொற்களாக்கு.

**மாதிரி :—**

| | | | |
|---|---|---|---|
| 1. ஆடு | காடு | பாடு | மாடு |
| 2. ஏடு | கேடு | பேடு | மேடு |
| 3. ஆண்டவர் | தாண்டவர் | பாண்டவர் | மாண்டவர். |

| | | | |
|---|---|---|---|
| 1 ஆடல் | .... டல் | .... டல் | .... டல் |
| 2 ஆட்சி | .... ட்சி | .... ட்சி | .... ட்சி |
| 3 ஆய்வு | .... ய்வு | .... ய்வு | .... ய்வு |
| 4 ஆகம் | .... கம் | .... கம் | .... கம் |
| 5 ஊட்டு | .... ட்டு | .... ட்டு | .... ட்டு |
| 6 ஏகம் | .... கம் | .... கம் | .... கம் |
| 7 ஏதம் | .... தம் | .... தம் | .... தம் |
| 8 காசம் | .... சம் | .... சம் | .... சம் |
| 9 காதம் | .... தம் | .... தம் | .... தம் |
| 10 காலம் | .... லம் | .... லம் | .... லம் |
| 11 காயம் | ... யம் | .... யம் | .... யம் |
| 12 கானம் | .... னம் | .... னம் | .... னம் |
| 13 காணம் | .... ணம் | .... ணம் | .... ணம் |
| 14 கூடல் | .... டல் | .... டல் | .... டல் |
| 15 கேட்டை | .... ட்டை | .... ட்டை | .... ட்டை |
| 16 சாக்கு | .... க்கு | .... க்கு | .... க்கு |
| 17 சீதம் | .... தம் | .... தம் | .... தம் |
| 18 ஆட்டம் | .... ட்டம் | .... ட்டம் | .... ட்டம் |
| 19 ஓட்டம் | .... ட்டம் | .... ட்டம் | .... ட்டம் |
| 20 காந்தம் | .... ந்தம் | .... ந்தம் | .... ந்தம் |

பயிற்சி :— 39

## சொல் திருத்தம் I.

கீழ்க்கண்ட சொற்களிலுள்ள எழுத்துக்கள் முன் பின்னாக மாறியிருக்கின்றன. அவற்றைச் சரிவர அமைத்துப் பொருள் உடைய சொற்களாக மாற்று.

**மாதிரி :—**

அதிகரா = ***அகராதி.***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அம்கல | = | .................. | 11 | குடங்கி | = | .................. |
| 2 | ஆதயும் | | .................. | 12 | வழகின் | | .................. |
| 3 | ஆயலம் | | .................. | 13 | கூரடாம் | | .................. |
| 4 | உமைடை | | .................. | 14 | கைக்கோரி | | .................. |
| 5 | சஞ்ஊல் | | .................. | 15 | சரக்கம் | | .................. |
| 6 | கட்டஓம் | | .................. | 16 | பண்சகம் | | .................. |
| 7 | ஒறுமைற் | | .................. | 17 | சாரளம் | | .................. |
| 8 | காடிகரம் | | .................. | 18 | காங்சிரம் | | .................. |
| 9 | வாடிகளம் | | .................. | 19 | பப்சிந்தி | | .................. |
| 10 | கய்காறி | | .................. | 20 | சுலிடெண் | | .................. |

பயிற்சி :— 40

## சொல் திருத்தம் II.

அடியிற்கண்ட சொற்களிலுள்ள எழுத்துக்கள் முன் பின்னாக மாறியிருக்கின்றன. அவற்றை ஒழுங்குற அமைத்துப் பொருள் உடைய சொற்களாக மாற்று.

**மாதிரி :—**

திந்தரம் = ***தந்திரம்.***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அந்கதை | = | .................. | 11 | கூறட்டுவு | = | .................. |
| 2 | ஆத்யதம் | | .................. | 12 | யத்திசாம் | | .................. |
| 3 | திந்இயரம் | | .................. | 13 | தாத்சுற்றர் | | .................. |
| 4 | ரப்பஈலா | | .................. | 14 | வருசுளி | | .................. |
| 5 | சுவஈரன் | | .................. | 15 | வம்படசென் | | .................. |
| 6 | காதிர்எலம் | | .................. | 16 | சேகவன் | | .................. |
| 7 | மிலுஎச்சை | | .................. | 17 | பிப்ததம் | | .................. |
| 8 | யக்கிஐம் | | .................. | 18 | ரகநம் | | .................. |
| 9 | சய்ச்கால் | | .................. | 19 | வருபம் | | .................. |
| 10 | யடிகுரசு | | .................. | 20 | கோன்வாழி | | .................. |

பயிற்சி :- 41

# எதிர்ச் சொற்கள் I.

அருள்மொழி, கயிறடித்தோடும் விளையாட்டில் நான், கண்டிப்பாக வெற்றி பெறுவேன் என்றாள். உடனே, மணிமொழி, 'கிளிமொழிதான் வெலிப்பாள்; நீ, தோல்வியடைவாய்' என்றாள்.

மேலேயுள்ள பத்தியில் தடித்த எழுத்திலுள்ள, '**வெற்றி**' '**தோல்வி**' என்னும் சொற்கள், ஒன்றற்கொன்று எதிர்மாறான கருத்தை உடையவை. இவ்வாறு ஒன்றற்கொன்று மாறுபட்ட, ஒரு சொல்லின் கருத்தை மறுக்கும் முறையில் அமைந்த - வேறு சொல்லையோ, சொற்களையோ '**எதிர்ச்சொல், எதிர்மொழி, எதிரிடைச்சொல், எதிர்மறைச்சொல்**' என்பர்.

முதலாம் வரிசையிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் ஏற்ற எதிர்ச்சொல்லை, இரண்டாம் வரிசையிலிருந்து தேர்ந்தெடுத்து, அந்தந்தச் சொல்லுக்கு எதிரே எழுது.

**மாதிரி :-**

வடக்கு × தெற்கு.

## முதலாம் வரிசை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | குடிசை × | ............................ | 11 | நீளம் × | ............................ |
| 2 | இனிமை | ............................ | 12 | போக்கு | ............................ |
| 3 | தாயார் | ............................ | 13 | நிலம் | ............................ |
| 4 | தற்காப்பு | ............................ | 14 | தீவிரம் | ............................ |
| 5 | மிருது | ............................ | 15 | நாதை | ............................ |
| 6 | மெல்லிய | ............................ | 16 | அறிவுடையார் | ............................ |
| 7 | நூதனம் | ............................ | 17 | உள் நாடு | ............................ |
| 8 | ஏராளம் | ............................ | 18 | இலக்கியம் | ............................ |
| 9 | பழமொழி | ............................ | 19 | சூழ்ந்து | ............................ |
| 10 | சுரசுரப்பு | ............................ | 20 | நற்குணம் | ............................ |

## இரண்டாம் வரிசை.

1. அறிவிலார். 2. மாளிகை. 3. வெளிநாடு. 4. கசப்பு 5. இலக்கணம். 6. தந்தையார். 7. விலகி. 8. பிறகாப்பு. 9. துர்க்குணம். 10. கெட்டி. 11. அநாதை. 12. திண்ணிய. 13. மந்தம். 14. புராதனம். 15. நீர். 16. கொஞ்சம். 17. வரவு. 18. புதுமொழி. 19. அகலம். 20. மழமழப்பு.

பயிற்சி :- 42

# எதிர்ச் சொற்கள் II.

முதலாம் வரிசையிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் ஏற்ற எதிர்ச்சொல்லை, இரண்டாம் வரிசையிலிருந்து தேர்ந்தெடுத்து, அந்தந்தச் சொல்லுக்கு எதிரே எழுது.

**மாதிரி :-**

உள்ளங்கை × புறங்கை.

## முதலாம் வரிசை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இட்டார் × | .............................. | 11 | தவறு × | .............................. |
| 2 | சமம் | .............................. | 12 | சமீபம் | .............................. |
| 3 | மிக்கவர் | .............................. | 13 | கேள்வி | .............................. |
| 4 | குறைந்த விலை | .............................. | 14 | பகல் | .............................. |
| 5 | இலகு | .............................. | 15 | பன்மை | .............................. |
| 6 | சுதந்திரம் | .............................. | 16 | எழுவாய் | .............................. |
| 7 | துவக்கி | .............................. | 17 | தன்மை | .............................. |
| 8 | மேலான | .............................. | 18 | குவிந்தன | .............................. |
| 9 | உள்ள | .............................. | 19 | தென்னிந்தியர் | .............................. |
| 10 | நிம்மதி | .............................. | 20 | காய் | .............................. |

## இரண்டாம் வரிசை.

1. கனி. 2. இடாதார். 3. வட இந்தியர். 4. மேடு. 5. விரிந்தன. 6. தாழ்ந்தவர். 7. முன்னிலை. 8. அதிக விலை. 9. பயனிலை 10. சிரமம். 11. ஒருமை. 12. அடிமைத்தனம். 13. அல். 14. முடித்து. 15. பதில். 16. அற்பமான. 17. தூரம். 18. இல்லாத. 19. சரி. 20. குழப்பம்.

பயிற்சி :– 43

# எதிர்ச் சொற்கள் III.

முதலாம் வரிசையிலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் ஏற்ற எதிர்ச்சொல்லை, இரண்டாம் வரிசையிலிருந்து தேர்ந்தெடுத்து, அந்தந்தச் சொல்லுக்கு எதிரே எழுது.

**மாதிரி :–**

தோண்டுதல் × தூர்த்தல்.

## முதலாம் வரிசை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | அமைத்தல் × | .................... | 11 | உறவு × | .................... |
| 2 | அமாவாசை | .................... | 12 | கட்டுதல் | .................... |
| 3 | ஆதாயம் | .................... | 13 | ஆசிரியர் | .................... |
| 4 | இணைத்தல் | .................... | 14 | குனிதல் | .................... |
| 5 | இறந்த காலம் | .................... | 15 | கொடுக்கல் | .................... |
| 6 | இளக்கம் | .................... | 16 | கொந்தளிப்பு | .................... |
| 7 | ஈரம் | .................... | 17 | திறத்தல் | .................... |
| 8 | உதயம் | .................... | 18 | சாதகம் | .................... |
| 9 | உபசாரம் | .................... | 19 | சீதேவி | .................... |
| 10 | உருகுதல் | .................... | 20 | தாமதம் | .................... |

## இரண்டாம் வரிசை.

1. துரிதம். 2. இறுகுதல். 3. மூதேவி. 4. அபசாரம். 5. பாதகம்.
6. மறைவு. 7. சாத்துதல். 8. வறட்சி. 9. அமைதி. 10. இறுக்கம்.
11. வாங்கல். 12. எதிர்காலம். 13. நிமிர்தல். 14. பிரித்தல். 15. மாணவர்.
16. நட்டம். 17. அவிழ்த்தல். 18. பூரணை. 19. பகை. 20. திறத்தல்.

பயிற்சி :- 44

## திசைச் சொற்கள் I.

வாணிகம், அரசியல் முதலிய காரணங்களால் தமிழ் மக்கள் பிறநாட்டு மக்களோடு தொடர்பு கொள்ள நேர்ந்தது. இத்தொடர்பாற் பிறநாட்டாருடைய சொற்களுட் சில தமிழிலும், தமிழ்ச் சொற்களுட் சில பிறநாட்டாருடைய மொழிகளிலும் கலந்துவிட்டன. இவ்வாறு, **தமிழிற் கலந்துள்ள அயல் மொழிச் சொற்களைத் 'திசைச் சொல்' என்பர்.**

தமிழில் விரவியுள்ள ஸம்ஸ்கிருதச் சொற்களை **'வடசொல்'** எனத் தனிப் பெயரிட்டு அழைப்பர்.

வடசொல் அல்லாத **தெலுங்கு, கன்னடம், உர்து, இந்துஸ்தானி, ஆங்கிலம்** முதலிய பிறமொழிச் சொற்கள் யாவும் **'திசைச்சொல்'** என்னும் பிரிவினுள் அடங்கும்.

தமிழிற் கலந்து வழங்கும் திசைச் சொற்களையும், அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்களையும் நீங்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும். அறிந்து, இயன்ற அளவு தமிழ்ச் சொற்களையே புழக்கத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

கீழே இரு வரிசைகளிருக்கின்றன. முதலாம் வரிசையில் **திசைச் சொற்களும்,** இரண்டாம் வரிசையில் அவற்றிற்கேற்ற **தமிழ்ச் சொற்களும்** தரப்பட்டுள்ளன. முதலாம் வரிசையிலுள்ள ஒவ்வொரு திசைச் சொல்லுக்கும் ஏற்ற தமிழ்ச் சொல்லை, இரண்டாம் வரிசையிலிருந்து தேர்ந்தெடுத்து, அதனதன் எதிரே எழுது.

தமிழ்நாடு ... சென்னை-600 008
14803

**மாதிரி :—**

| | மொழிப் பிரிவு | திசைச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|
| 1 | ஆந்திரம் | செப்பு | சொல் |
| 2 | கன்னடம் | அக்கறை | கவனம் |
| 3 | இந்துஸ்தானி | தபால் | அஞ்சல் |
| 4 | போர்ச்சுகீஸ் | அலமாரி | நிலைப்பேழை |
| 5 | ஆங்கிலம் | சைக்கிள் | மிதிவண்டி |

TB
031(4) N6

## முதலாம் வரிசை.

| திசைச் சொல் | தமிழ்ச் சொல் | திசைச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|
| 1 சன்னல் | .................................... | 11 சிப்பாய் | .................................... |
| 2 சலாம் | .................................... | 12 சோதா | .................................... |
| 3 டேரா | .................................... | 13 நர்ஸ் | .................................... |
| 4 ஆபீசு | .................................... | 14 தகவல் | .................................... |
| 5 உஷார் | .................................... | 15 சாவி | .................................... |
| 6 மோட்டார் | .................................... | 16 தரப்பு | .................................... |
| 7 கவாத்து | .................................... | 17 ரேடியோ | .................................... |
| 8 படுதா | .................................... | 18 மாஜி | .................................... |
| 9 குமாஸ்தா | .................................... | 19 போலீசார் | .................................... |
| 10 குஷி | .................................... | 20 பந்தோபஸ்து | .................................... |

## இரண்டாம் வரிசை.

1. கொண்டாட்டம் 2. பாதுகாப்பு 3. கணக்கர் 4. ஊர்காவலர் 5. திரை 6. பழைய 7. உடற்பயிற்சி 8. வானொலி 9. இயங்கி 10. பக்கம் 11. விழிப்பு 12. திறவுகோல் 13. வணக்கம் 14. செய்தி 15. அலுவலகம் 16. செவிலி 17. கூடாரம் 18. சோம்பேறி 19. சாளரம் 20. வீரன்.

பயிற்சி :- 45

# திசைச் சொற்கள் II.

முதலாம் வரிசையிலுள்ள ஒவ்வொரு திசைச் சொல்லுக்கும் ஏற்ற தமிழ்ச் சொல்லே, இரண்டாம் வரிசையிலிருந்து தேர்ந்தெடுத்து, அதனதன் எதிரே எழுது.

**மாதிரி :—**

| திசைச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|
| மிட்டாய் | தித்திப்பு |

## முதலாம் வரிசை

| திசைச் சொல் | தமிழ்ச் சொல் | திசைச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|
| 1 ரஸ்தா | ........................ | 11 தினுசு | ........................ |
| 2 ரஜா | ........................ | 12 ஜாமீன் | ........................ |
| 3 ராஜிநாமா | ........................ | 13 பசார் | ........................ |
| 4 லாயக்கு | ........................ | 14 ஜாஸ்தி | ........................ |
| 5 லாயம் | ........................ | 15 ஜேப் | ........................ |
| 6 வக்கீல் | ........................ | 16 ஜோர் | ........................ |
| 7 சபாஷ் | ........................ | 17 சர்க்கார் | ........................ |
| 8 ஜதை | ........................ | 18 ஜவாப் | ........................ |
| 9 ஜல்தி | ........................ | 19 அசல் | ........................ |
| 10 பாரா | ........................ | 20 இனும் | ........................ |

## இரண்டாம் வரிசை

1. நன்கொடை 2. சாலே 3. முதல் 4. விடுமுறை 5. பதில் 6. வேலேவிடுகை 7. அரசியலார் 8. தகுதி 9. நேர்த்தி 10. கொட்டில் 11. சட்டைப்பை 12. வழக்கறிஞர் 13. மிகுதி 14. நன்று 15. சந்தை 16. இணே 17. பிணே 18. சுருக்காய் 19. வகை 20. காவல்.

பயிற்சி :- 46

## சொற்சேர்ப்பு I.

ஆடல், பாடல், இசை, மொழி, ஓவியம், சிற்பம், மருத்துவம் என்பன, வெவ்வேறு பொருள்தரும் தனிச் சொற்களாகும். இச் சொற்களோடு, 'கலை' என்னுஞ் சொல்லைச் சேர்த்து, **ஆடற்கலை, பாடற்கலை, இசைக்கலை, மொழிக் கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, மருத்துவக்கலை** என வெவ்வேறு புதிய தொடர்களைத் தோற்றுவிக்கலாம்.

கீழேயுள்ள ஒவ்வொரு வரிசையிலும் கோடிடப்பட்ட ஐந்து சொற்கள் இருக்கின்றன. இவ்வாறு கோடிட்டுள்ள ஒரு வரிசைச் சொற்களில், கோடிட்ட எல்லா இடங்களிலும் ஒரேயொரு சொல்லை மட்டுந்தான் சேர்க்க வேண்டும். **ஒரு வரிசையிற் சேர்த்த சொல்லை, வேறொரு வரிசையிற் சேர்க்கலாகாது.**

**மாதிரி :–**

சேர்க்க வேண்டிய சொல்: முனை.

1. வாள் முனை 2. வேல் முனை 3. ஈட்டி முனை 4. அரிசி முனை
5. ஊசி முனை 6. போர் முனை 7. கத்தி முனை 8. துப்பாக்கி முனை.

1 அ. மேல் .................... ஆ. கீழ் .................... இ. கால் ....................
ஈ. பவள .................... உ. செவ் ....................

2 அ. ஏரி .................... ஆ. ஆற்று .................... இ. ஊற்று....................
ஈ. தடாக .................... உ. சுனை ....................

3 அ. நாட்டு .................... ஆ. நகர் .................... இ. நில ....................
ஈ. நீர் .................... உ. பொருள் ....................

4 அ. மலை .................... ஆ. தலை .................... இ. மாடி ....................
ஈ. கோபுர .................... உ. மர ....................

5. அ. தென்னை .................... ஆ. பனை .................... இ. கமுகு ....................
ஈ. ஈச்ச .................... உ. அத்தாப்பு ....................

### சேர்க்க வேண்டிய சொற்கள்.

1. நீர். 2. உச்சி. 3. ஓலை. 4. வளம். 5. வாய்.

பயிற்சி :– 47

# சொற்சேர்ப்பு II.

கீழேயுள்ள ஒவ்வொரு வரிசையிலும் கோடிடப்பட்ட ஐந்து சொற்கள் இருக்கின்றன. இங்ஙனம் கோடிட்டுள்ள ஒரு வரிசைச் சொற்களில், கோடிட்ட எல்லா இடங்களிலும் ஒரேயொரு சொல்லைத்தான் சேர்க்கவேண்டும். ஒரு வரிசையில் சேர்த்த சொல்லை, மற்றொரு வரிசையிற் சேர்க்கலாகாது.

**மாதிரி :–**

சேர்க்க வேண்டிய சொல் : **பந்தல்.**

1. விழாப்**பந்தல்** 2. மணப்**பந்தல்** 3. திராட்சைப்**பந்தல்** 4. அவரைப்**பந்தல்**
5. சுரைப்**பந்தல்**

1 அ. போர்........................ ஆ. வீர........................ இ. கூர்........................
ஈ. அரி........................ உ. ஈர்........................

2 அ. மணி........................ ஆ. பொன்........................ இ. வைர........................
ஈ. தங்க........................ உ. தலை........................

3 அ. பகாங்........................ ஆ. பேரா........................ இ. கிளந்தான்........................
ஈ. கிந்தா........................ உ. கிரியான்........................

4 அ. அல்லி........................ ஆ. தாமரை........................ இ. முல்லை........................
ஈ. ரோசா........................ உ. குவளை........................

5 அ. திரு........................ ஆ. மலர்........................ இ. புனுகு........................
ஈ. அத்தர்........................ உ. பன்னீர்........................

## சேர்க்க வேண்டிய சொற்கள்.

1. ஆறு 2. மணம் 3. வாள் 4. முடி 5. மலர்

பயிற்சி :- 48

## சொற்சேர்ப்பு III.

**போர்** என்பது ஒரு சொல். இச்சொல்லை மாற்ருமல், இச்சொல்லுக்கு முன் வெவ்வேறு தனிச் சொற்களை இணைத்து, 1. தரைப்போர் 2. கடற்போர் 3. மற்போர் 4. விமானப் போர் 5. விற்போர் 6. வாட்போர் 7. துப்பாக்கிப் போர் 8. உரிமைப் போர் 9. சொற்போர் 10. அக்கப்போர் என, வெவ்வேறு தனித் தொடர்களை ஆக்கலாம்.

கீழேயுள்ள ஒவ்வொரு வரிசையிலும் தனிச் சொற்களையடுத்துப் புள்ளிகள் இடப்பட்டிருக்கும் இடங்களில் தகுந்த சொற்களைச் சேர். ஒவ்வொரு வரிசையிலும் சேர்க்க வேண்டிய சொற்கள், ஒவ்வொரு தொகுதியாக அடியில் தரப்பட்டிருக் கின்றன. **ஒரு வரிசையிற் சேர்த்த சொல்லை, இன்னெரு வரிசையிற் சேர்க்கக் கூடாது.**

**மாதிரி :-** ..........................................மதி

பொருத்த வேண்டிய தொகுதிச் சொற்கள் : **காந்தி - பாநு - முழு - நிறை - வளர்.**

அ. **காந்தி**மதி ஆ. **பாநு**மதி இ. **முழு**மதி ஈ. **நிறை**மதி உ. **வளர்**மதி.

1 அ. ..............................விழி ஆ. ..............................விழி இ. ..............................
ஈ. ..............................விழி உ. ..............................விழி.

2 அ. ..............................மாலை ஆ. ..............................மாலை இ. ..............................மாலை
ஈ. ..............................மாலை உ. ..............................மாலை.

3 அ. ..............................சமயம் ஆ. ..............................சமயம் இ. ..............................சமயம்
ஈ. ..............................சமயம் உ. ..............................சமயம்.

4 அ. ..............................முகில் ஆ. ..............................முகில் இ. ..............................முகில்
ஈ. ..............................முகில் உ. ..............................முகில்.

5 அ. ..............................பூ. ஆ. ..............................பூ. இ. ..............................பூ.
ஈ. ..............................பூ. உ. ..............................பூ.

### நிரப்ப வேண்டிய தொகுதிச் சொற்கள்.

1. கார் - வான் - வெண் - கரு - மழை.
2. மீன் - கரு - மலர் - கெண்டை - கயல்.
3. கோட்டுப் - கொடிப் - செடிப் - நிலப் - நீர்ப்.
4. சரிகை - பூ - மண - மலர் - காகித.
5. இந்து - புத்த - இஸ்லாமிய - சைவ - கிறிஸ்தவ.

பயிற்சி :— 49

# சொற்சேர்ப்பு IV.

கீழேயுள்ள ஒவ்வொரு வரிசையிலும் ஐந்து தனிச்சொற்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வரிசையிலும் கோடிடப்பட்ட இடங்களில் தகுந்த சொற்களை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு வரிசையிலும் நிரப்ப வேண்டிய சொற்கள். ஒவ்வொரு தொகுதியாக அடியில் தரப்பட்டிருக்கின்றன. ஒரு வரிசையில் நிரப்பிய சொல்லை, மற்றொரு வரிசையிற் பொருத்தலாகாது.

**மாதிரி :-**

.................................. கனி

பொருத்த வேண்டிய சொற்கள் : **மாங் - பலாக் -**

**வாழைக் - கொய்யாக் - நாவற் -**

அ. **மாங்**கனி. ஆ. **பலாக்**கனி. இ. **வாழைக்**கனி.

ஈ. **கொய்யாக்**கனி. உ. **நாவற்**கனி.

1 அ. ..............................மணி ஆ. ..............................மணி இ. ..............................மணி

ஈ. ..............................மணி உ. ..............................மணி.

2 அ. ..............................வேளை ஆ. ..............................வேளை இ. ..............................வேளை

ஈ. ..............................வேளை உ. ..............................வேளை.

3 அ. ..............................மனிதர் ஆ. ..............................மனிதர் இ. ..............................மனிதர்

ஈ. ..............................மனிதர் உ. ..............................மனிதர்

4 அ ..............................அழகு ஆ. ..............................அழகு இ. ..............................அழகு

ஈ. ..............................அழகு உ. ..............................அழகு

5 அ. ..................அலங்காரம் ஆ. ..................அலங்காரம் இ. ..................அலங்காரம்

ஈ. ..............................அலங்காரம் உ. ..............................அலங்காரம்

## நிரப்ப வேண்டிய தொகுதிச் சொற்கள்.

1 தீப - மண்டப - மேடை – பந்தல் - கோயில்.

2 ஏழை – நல்ல – தீய – நெட்டை - குட்டை.

3 காலை – மாலை – இரவு - மத்தியான - உச்சி.

4 கோயில் - பூசை - ஆலய - வைர - மரகத.

5 மலர் - முக - எழுத்து - சொல் - நடை-

பயிற்சி :– 50

## புதிர்களின் பொருள் அறிதல்.

புதிர் என்பது விடுகதை. ஒரு பொருளின் இயல்புகளைப் பற்பல குறிப்புக்களால் உணர்த்தி, அப் பொருள் இன்னதெனக் காணுமாறு செய்தல், **புதிர்** அல்லது **விடுகதை** அல்லது **நொடி** எனப்படுகிறது.

பழமொழிகள் போலப் புதிர்களும் மிகப் பழங்காலந்தொட்டே ஒவ்வொரு மொழியிலும் இடம் பெற்றுள்ளன.


பழமொழிகளைப் படித்தவரும் படியாதவருங் கையாளுதல் போலப், புதிர்களையுங் கற்றவர் கல்லாதவர் ஆகிய இருபாலரும் கையாளுகின்றனர்.

புதிர்கள் சிந்தனையை விரிவாக்கி, அறிவு வளர்ச்சியைப் பெருக்கும் ஆற்றல் வாய்ந்தவை. தமிழிலுள்ள விடுகதைகளையும் அவற்றின் கருத்துக்களையும் நீங்கள் கற்றறிதல் வேண்டும்.

எளிமையான புதிர்களிற் சில அடியிற்கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய விடைகள் சித்திர வடிவில் தரப்பட்டிருக்கின்றன.

புதிர்ப் பாடலைக் கவனமாகப் படித்த பிறகு படங்களைக் கவனி. ஒவ்வொரு புதிருக்கும் உரிய விடையை அதனதன் எதிரே எழுது.

**மாதிரி :–**



செக்கச் சிவந்திருக்கும்
சிவப்பு ரத்தினம் போலிருக்கும்
கடைகளிலே வந்திருக்கும்
கண்ணிற்பட்டால் அழுகைவரும்

அது என்ன? ***மிளகாய்***

1 தகதகவென்ற தாம்பளம்
தங்க நிறமுள்ள தாம்பளம்
கிழக்கில் தோன்றும் தாம்பளம்
ஆற்றுக்குள்ளே கிணற்றுக்குள்ளே
அசைந்து மிதக்கும் தாம்பளம்

அது எது? ..................

2 தாயோ கடல்
தந்தையோ சூரியன்
என்னை விரும்பி ஏற்காத வீடு இல்லை.

அது என்ன? ..................

3 தலை இல்லை ; கை உண்டு.
மார்பு இல்லை ; முதுகு உண்டு.
வயிறு இல்லை ; இடுப்பு உண்டு.
விரல் இல்லை ; கை உண்டு.
பாதம் இல்லை ; கால் உண்டு.
உயிர் இல்லை; உடல் உண்டு.

அது என்ன ? ..........................

4 கை உண்டு, கால் இல்லை.
கழுத்து உண்டு ; தலை இல்லை.
பை உண்டு ; பணம் இல்லை.
நெஞ்சு உண்டு ; உயிர் இல்லை.


அது எது ? ..........................


5 பச்சைக்கோலி கண்ணாடிக்கோலி,
பார்க்க அழகான கோலி
கொத்துக் கொத்தாய்க் கொடியில்
காய்த்துக் கொல்லையில் தொங்கும்




அது என்ன ? ..........................

6 நிலத்தில் வரும், நீரில் வரும், தவளை அன்று ;
நீட்டி அதன் தலை இருக்கும் அட்டை அன்று ;
பலத்த ஓர் ஓடு இருக்கும், தேங்காய் அன்று ;
பாய்ந்து வர முடியாது, பாம்பும் அன்று.

அது யாது ? ..........................





பயிற்சி :- 51

# பாடலின் பொருள் அறிதல் I.

## அழகு.

கீழேயுள்ள பாடலைக் கவனமாகப் படி. பிறகு, அடியிலுள்ள வினாக்களுக்கு விடை எழுது.

1 நாட்டுக்கு அழகு வளமை
நாவிற்கு அழகு இன்சொல்
வீட்டுக்கு அழகு வெளிச்சம்
வீதிக்கு அழகு ஒழுங்கு.

2 காற்றுக்கு அழகு மென்மை
கடலுக்கு அழகு அலைகள்
ஆற்றுக்கு அழகு ஓட்டம்
ஆணுக்கு அழகு வீரம்.

3 பெண்ணுக்கு அழகு கற்பு
பேச்சுக்கு அழகு உறுதி
கண்ணுக்கு அழகு கருணை
கல்விக்கு அழகு அடக்கம்.

4 சலத்திற்கு அழகு சுத்தம்
சங்குக்கு அழகு வெண்மை
நிலத்திற்கு அழகு விளைவு
நெற்றிக்கு அழகு திலகம்.

*(பாடல்-குழந்தைக் கவிஞர்)*

(1) விடை கூறு :

**மாதிரி :–** ...... நாட்டிற்கு எது அழகு தரும் ?
நாட்டிற்கு வளமை அழகு தரும்.

1 நாவிற்கு அழகு தருவது யாது ?

..........................................................................................

2 மென்மை எதற்கு அழகைக் கொடுக்கிறது ?

..........................................................................................

3 ஆற்றிற்கு அழகை அளிப்பது எது ?

..........................................................................................

4 ஆணுக்கு அழகு தருவது எது ?

..........................................................................................

5 பெண்ணுக்கு அழகு அளிப்பது யாது ?

..........................................................................................

6 கண்ணுக்கு அழகு தருவது எது ?

..........................................................................................

7 மண்ணுக்கு எது அழகு தரும் ?

..........................................................................................

8 பேச்சு அழகாயிருக்க என்ன வேண்டும் ?

..........................................................................................

9 நெற்றி அழகாயிருக்க அதில் என்ன இடவேண்டும் ?

..........................................................................................

10 சுத்தம் இருந்தால் எது அழகுபெறும் ?

..........................................................................................

பயிற்சி :- 52

# பாடலின் பொருள் அறிதல் II.

## வேண்டும்.

கீழேயுள்ள பாடலைக் கவனமாகப் படி.

1 தலையே, உலகில் நீதிக்குத்
தாழ்ந்து பணிந்திட வேண்டும், நீ.

2 கண்ணே, பார்க்கும் பார்வையிலே,
கருணை பொழிந்திட வேண்டும், நீ.

3 காதே, நல்ல வார்த்தைகளைக்
கருத்தாய்க் கேட்டிட வேண்டும், நீ.

4 வாயே, உள்ளம் குளிர்ந்திடவே,
வார்த்தை கூறிட வேண்டும், நீ.

5 மூக்கே, இன்ப விடுதலையே
மூச்சாய் வெளியிட வேண்டும், நீ.

6 வயிறே, ஏழை மனங்குளிர
வழங்கி உண்ணுதல் வேண்டும், நீ.

7 கையே, கஷ்டப்படுவோர்க்கு,
கை கொடுத்துதவிட வேண்டும், நீ.

8 காலே, பாதகச் செயல்யாவும்
கடிதில் நசுக்கிட வேண்டும், நீ.

9 உடலே, உலகில் புகழென்னும்
உடலை நாட்டிட வேண்டும், நீ.

*(பாடல்: குழந்தைக் கவிஞர்.)*

**அடியிலுள்ள வினாக்களுக்கு விடை எழுது.**

**மாதிரி :–** தலை எதற்குப் பணிய வேண்டும் ?
**தலை நீதிக்குப் பணிய வேண்டும்.**

1 பார்வையிற் காணப்பட வேண்டுவது எது ?

........................................................................................................

2 காதுகள் எவற்றைக் கேட்க வேண்டும் ?

........................................................................................................

3 வாய் எப்படிப்பட்ட சொற்களைப் பேச வேண்டும் ?

........................................................................................................

4 மூச்சு எப்படிப்பட்டதாய் இருத்தல் வேண்டும் ?

........................................................................................................

5 கைகளின் கடமை யாது ?

........................................................................................................

6 காலால் நசுக்கப்பட வேண்டியவை யாவை ?

........................................................................................................


பயிற்சி :– 53

# பாடலின் பொருள் அறிதல் III.

## குணங்கள்.

கீழேயுள்ள பாடலைக் கவனமாகப் படி.


1 சத்து நிறைந்த பாலினையே
தந்து நம்மைக் காத்திடுமே.
இத்தனை சாதுப் பிராணிதனை
எங்கே னும்நீ கண்டாயோ ?




2 அண்டை ஊர்கள் சென்றிடவே
வண்டி இழுத்துச் சென்றிடுமே.
மண்டிப் பயிர்கள் வளர்ந்திடவே,
மண்ணை நன்கு உழுதிடுமே.




3 நன்றி உள்ள உயிர்களிலே
நல்ல மிருகம் இதுவொன்ரும்.
வென்றி கொண்ட வீரன்போல்
வீட்டைக் காத்து நின்றிடுமே.



4 குளிரைப் போக்கக் கம்பளியும்
குடிக்கப் பாலும் நமக்கெல்லாம்
அளிக்கும் நல்ல மிருகம் இது,
அண்டிப் பிழைக்கும் நம்மை இது.



5 கழுத்தை நீட்டிக் கூவிடுமே
காலைப் போதில் சிறகடித்தே.
'எழுந்திரு விழித்திடு' என்றதுவும்
எழுப்பித் தூக்கம் ஓட்டிடுமே.



6 பாலைக் குடித்தும் சாதுவைப்போல்
பஞ்சுக் காலால் நடந்திடுமே.
வேலைகள் அதற்கு வேறில்லை
வீட்டில் எலிகள் பிடிப்பதுதான் !





7 நமக்கென வைத்த பண்டமெலாம்
நாடித் தேடித் தின்றிடுமே.
நமக்கெனத் தைத்த சட்டைகளை
நாசம் ஆகக் கடித்திடுமே.

(பாடல்: குழந்தைக் கவிஞர்)

**அடியிலுள்ள வினுக்களுக்கு விடை எழுது.**

**மாதிரி :—** பசு எப்படிப்பட்ட பிராணி? அது நமக்கு எதனைத் தருகிறது?
**பசு சாதுவான பிராணி. அது நமக்குப் பாலைத் தருகிறது.**

1 காளை நமக்கு எந்தெந்த வகைகளில் உதவுகின்றது?

........................................................................................................................

........................................................................................................................

2 நாய் செய்யும் உதவி என்ன?

........................................................................................................................

........................................................................................................................

3 ஆடு நமக்கு என்னென்ன அளிக்கின்றது?

........................................................................................................................

........................................................................................................................

4 சேவல் அதிகாலையில் என்ன செய்கிறது?

........................................................................................................................

........................................................................................................................

5 பூனை எப்படிப்பட்ட குணமுடையது? அது செய்யும் வேலை என்ன?

........................................................................................................................

........................................................................................................................

6 எலி என்னென்ன தீமைகளைச் செய்கின்றது?

........................................................................................................................

........................................................................................................................

பயிற்சி :- 54

# 'ண' கர, 'ன' கர வேறுபாடு அறிதல்.

'ஊண்' என்பது உண்ணும் உணவைக் குறிக்கின்றது. 'ஊன்' என்பது இறைச்சியைக் குறிக்கின்றது. 'ஊண் – ஊன்' என்னும் சொற்களில் உள்ள, 'ண்' 'ன்' என்னும் எழுத்துக்களிடையே எழுத்து வேறுபாடும், உச்சரிப்பு வேறுபாடும் இருத்தல் போலப் பொருள் வேறுபாடும் உண்டு. ஆகவே, 'ண' கர, 'ன' கரச் சொற்களின் பொருள் அறிந்து அவற்றை நீங்கள் கையாள வேண்டும்.

அடியிற் காணும் ஒவ்வொரு தொடரிலும், அடைப்புக் குறியினுள் இரு சொற்கள் தரப்பட்டிருக்கின்றன. அவ்விரு சொற்களுள், தரப்பட்டிருக்கும் வாக்கியத்திற்குப் பொருத்தமான சொல் எது, என்பதைக் கண்டுபிடித்து, அதன் கீழ்க் கோடிடு.

**மாதிரி :–**

கட்டட வேலைக்கு ( ஆனி, <u>ஆணி</u> ) உதவுகிறது.

1 கோபத்தைத் (தனி, தணி)த்துக் கொள்ளவேண்டும்.

2 (தனி, தணி) மரம் தோப்பாக மாட்டாது.

3 அவ்வையார், தந்தை தாய்ப் (பேன், பேண்) என்றார்.

4 தலைமயிர் துப்புரவாயிருந்தாற் (பேன், பேண்) தங்காது.

5 வள்ளல் அழகப்பர் (வண்மை, வன்மை)யிற் சிறந்தவர்.

6 வைரம் (வண்மை, வன்மை)யான பொருள்.

7 (மாண், மான்) புல்லைத் தின்று வாழும்.

8 களி (மன், மண்) நிலம் பயிரிடுவதற்கு ஏற்றதன்று.

9 (பூனை, பூணை) புலியின் இனத்தைச் சேர்ந்தது.

10 கோழிப் (பன்னை, பண்ணை)யிற் கோழிகள் மிகுதியாயிருக்கும்.

11 மூடு (பனி, பணி) பொருள்களை மறைத்துவிடும்.

12 (தண், தன்) முதுகு தனக்குத் தெரியாது.

13 (கண்ணிமை, கன்னிமை) கண்ணைக் காக்கிறது.

14 நாயின் மீதிருக்கும் (உன்னி, உண்ணி) அதன் இரத்தத்தைக் குடிக்கும்.

15 (அன்னம், அண்ணம்) நீரை விரும்பும்.

பயிற்சி :— 55

## 'ர'கர, 'ற'கர வேறுபாடு அறிதல்.

'அருகு' என்பது, சமீபம் எனப் பொருள்படும். 'அறுகு' என்பது, அறுகம்புல் எனப் பொருள்படும். 'அருகு - அறுகு' என்னுஞ் சொற்களில் உள்ள, '*ரு - று*' என்னும் எழுத்துக்களிடையே எழுத்து வேறுபாடும், உச்சரிப்பு வேறுபாடும் இருத்தல் போலக் கருத்து வேறுபாடும் காணப்படும். ஆகவே '*ர*' கர '*ற*' கரச் சொற்களைக் கையாளும் போது, அவற்றின் பொருளறிந்து கையாள வேண்டும்.

அடியிலுள்ள ஒவ்வொரு தொடரிலும், அடைப்புக் குறியினுள் இரு சொற்கள் தரப்பட்டிருக்கின்றன. அவ்விரு சொற்களுள், கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியத்திற்குப் பொருத்தமான சொல் எது, என்பதைக் கண்டுபிடித்து, அதன் கீழ்க் கோடிடு.

**மாதிரி :—**

( அறவு, <u>அரவு</u> ) தவளையைப் பிடித்து விழுங்கும்.

1 மயிலின் (இரகு, இறகு) அழகானது.
2 பறவைக் குஞ்சுக்கு (இறக்கை, இரக்கை) இராது.
3 மிளகு (உரைப்பு, உறைப்பு)ச் சுவை உடையது.
4 மைஒற்றும் தாள் மையை (உறிஞ்சும், உரிஞ்சும்)
5 (உறுக்கு, உருக்கு) மிகப் பயனுள்ள உலோகம்.
6 குற்றவாளிகளை அரசாங்கம் (ஒறுக்கும், ஒருக்கும்)
7 அடுப்புக் (கரி, கறி) கரிய நிறமுடையது.
8 யானை (கருப்பு, கறுப்பு) நிறமுடையது.
9 கடற் (கறை, கரை) யில் மணல் மிகுதி.
10 தேக்கு மரத்தைக் (கறையான், கரையான்) அரிக்காது.
11 (கீறி, கீரி)ப் பிள்ளை நாகப் பாம்பைக் கொல்லும்.
12 ஏழை மக்களுடைய கூலியைக் (குரைக்க, குறைக்க) லாகாது.
13 (கோறை, கோரை)ப் புல் நீரில் வளரும்.
14 கடலிற் (சுரா, சுறு) மீன்கள் வாழும்.
15 (தேரை, தேறை) பூச்சிகளைப் பிடித்து விழுங்கும்.

பயிற்சி :- 56

## 'ல'கர, 'ழ'கர வேறுபாடு அறிதல்.

'பலம்' என்பது உடல் வலிமையைக் குறிக்கும். 'பழம்' என்பது தின்னுகின்ற கனியைக் குறிக்கும். 'பலம் - பழம்' என்னும் சொற்களில் உள்ள, 'ல - ழ' என்னும் எழுத்துக்களிடையே எழுத்து வேறுபாடும், உச்சரிப்பு வேறுபாடும் உள்ளன. இங்ஙனமே, 'ல'கர, 'ள'கரச் சொற்களிடையே பொருள் வேறுபாடும் உண்டு. ஆகவே, அவற்றைப் பொருளறிந்து பயன்படுத்த வேண்டும்.

அடியிலுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும், அடைப்புக் குறியினுள் இரு சொற்கள் தரப்பட்டிருக்கின்றன. அவ்விரு சொற்களுள், எது தரப்பட்டிருக்கும் வாக்கியத்திற்குப் பொருத்தமானது என்பதைக் கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடு.

**மாதிரி :-**

(இலவு, இழவு) என்பது இலவ மரத்தைக் குறிக்கும்.

1 (இலவு, இழவு) வீட்டில் ஒரே ஓலமாயிருக்கும்.

2 (கலகம், கழகம்) நடைபெறுமிடத்திற்கு ஊர் காவலர் வருவர்.

3 (கலகம், கழகம்) என்பது சங்கத்தைக் குறிக்கும்.

4 பிள்ளைகள் சிலர் (கோலி, கோழி) வைத்து விளையாடுவர்.

5 பிள்ளைகள் சிலர் (கோலி, கோழி) முட்டை உண்பர்.

6 பலாப்பழத் (தோழி, தோலி) முருடாயிருக்கும்.

7 சிறுமியர் (தோழி, தோலி) மாரோடு விளையாடுவர்.

8 தெய்வங்கட்கு ஆடு, கோழிகளைப் (பழி, பலி) யிடக் கூடாது.

9 பிறரைப் (பழி, பலி) த்துப் பேசக்கூடாது.

10 பசுவின் (பாழ், பால்) சத்துள்ளது.

11 (பாழ், பால்) அடைந்த வீட்டில் வௌவால் குடிகொள்ளும்.

12 (மலை, மழை)த் தொடர் மேகங்களைத் தடுக்கும்.

13 (மலை, மழை) நீர் பயிர் வளர உதவுகிறது.

14 கொரில்லாவிற்கு (வாழ், வால்) கிடையாது.

15 பாடுபட்டு உழைப்பவர்கள், வறுமையின்றி (வாழ், வால்) வர்.

பயிற்சி :– 57

## 'ல'கர, 'ள'கர வேறுபாடு அறிதல்.

'உலவு' என்பது உலாவுதலைக் குறிக்கின்றது. 'உளவு' என்பது வேவு பார்த்தலைக் குறிக்கின்றது. 'உலவு – உளவு' என்னும் சொற்களில் உள்ள, **'ல - ள'** என்னும் எழுத்துக்களிடையே எழுத்து வேறுபாடும் உச்சரிப்பு வேறுபாடும் இருத்தல் போலப் பொருள் வேறுபாடும் உண்டு. ஆகவே, **'ல'** கர, **'ள'** கரச் சொற்களைப் பயன்படுத்தும் போது, அவற்றின் பொருளறிந்து பயன்படுத்த வேண்டும்.

கீழ்க்கண்ட ஒவ்வொரு வாக்கியத்திலும், அடைப்புக் குறியினுள் இரு சொற்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரு சொற்களுள், எது கொடுக்கப் பட்டிருக்கும் வாக்கியத்திற்குப் பொருத்தமானது என்பதைக் கண்டுபிடித்து, அதன் கீழ்க் கோடிடு.

**மாதிரி :–**

வாத்தின் (<u>அலகு</u>, அளகு) தட்டையாயிருக்கும்.

1 அச்சங்கொண்ட பிள்ளைகள் ஒன்றிருக்க ஒன்றை (உலரு, உளறு) வார்கள்.
2 ஈர ஆடைகளை வெயிலில் (உலர, உளற) வைப்பார்கள்.
3 கோள் சொல்லி ஒரு குடும்பத்தைக் (களைத்தல், கலைத்தல்) ஆகாது.
4 நீண்ட தூரம் ஓடினாற் (களைத்தல் கலைத்தல்) ஏற்படும்.
5 பிறருக்கு ஒன்றை ஈயாதவரை, இழி (குளம், குலம்) என்பர்.
6 குடிநீர்க் (குளம், குலம்) துப்புரவாயிருக்க வேண்டும்.
7 வீட்டுக் (கொல்லை, கொள்ளை) யில் காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம்.
8 பிறர் பொருளைக் (கொல்லை, கொள்ளை) யடிப்பவரை அரசினர் தண்டிப்பர்.
9 (தொலை, தொளை) வில் உள்ள பொருள் சிறிதாகத் தோன்றும்.
10 புல்லாங்குழல் ஒரு (தொலை, தொளை)க் கருவி.
11 வீட்டில் வாழும் (பள்ளி, பல்லி) ஈக்களைப் பிடித்துத் தின்னும்.
12 நாள்தோறும் (பள்ளி, பல்லி) க்குச் செல்லவேண்டும்.
13 (பாலை, பாளை) நிலத்தைக் கடக்க ஒட்டகம் உதவும்.
14 பசுவின் (பாலை, பாளை) க் காய்ச்சாமல் அருந்தக்கூடாது.
15 தீயவருடைய நட்பை (விளக்குதல், விலக்குதல்) வேண்டும்.
16 பாத்திரங்களை அழுக்குப் போக (விளக்குதல், விலக்குதல்) வேண்டும்.

பயிற்சி :– 58

## 'ள'கர 'ழ'கர வேறுபாடு அறிதல்.

'விளைதல்' என்பது உண்டாதலையும், 'விழைதல்' என்பது விரும்புதலையும் குறிக்கும். 'விளைதல் - விழைதல்' என்னும் சொற்களில் உள்ள, 'ளை - ழை' என்னும் எழுத்துக்களிடையே உச்சரிப்பு வேறுபாடு உண்டு; பொருள் வேறுபாடும் உண்டு. ஆகவே, அவற்றைப் பொருளுணர்ந்து பயன்படுத்த வேண்டும்.

அடியிலுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் அடைப்புக் குறியினுள் இரு சொற்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரு சொற்களுள், எது கொடுக்கப் பட்டிருக்கும் வாக்கியத்திற்குப் பொருத்தமானது என்பதைக் கண்டுபிடித்து, அதன் கீழ்க் கோடிடு.

**மாதிரி :-**

( வாழி, <u>வாளி</u> ) யில் நீர் மொண்டு வரலாம்.

1 ( குழவி, குளவி ) க் கூட்டைக் கலைக்கக்கூடாது.

2 ( குழவி, குளவி ) யின் சிரிப்பு கலங்கமற்றது.

3 ( சோள, சோழ ) மணிகள் மஞ்சள் நிறமுடையவை.

4 ( சோள, சோழ ) மன்னர்கள் பிறநாடுகளை வென்றார்கள்.

5 ( தாழ், தாள் ) இல்லாத கதவு பயன்படாது.

6 எழுது ( தாழ், தாள் ) இல்லாமல் எழுத முடியுமா ?

7 கண்களை நன்றாகக் கழுவினாற் ( பீழை, பீளை ) சாராது.

8 பேராசை ( பீழை, பீளை ) தரும்.

9 விளையும் பயிர் ( முளை, முழை ) யிலே தெரியும்.

10 கரடி ( முளை, முழை ) யில் வாழும்.

11 ( வாள், வாழ் ) கொண்டு மரக்கிளைகளை வெட்டலாம்.

12 நல்ல பழக்கங்களை உடையவர் நீண்டகாலம் ( வாள், வாழ் ) வர்.

13 ( விழா, விளா ) ம் பழம் பந்து போல் உருண்டையாயிருக்கும்.

14 ( விழா, விளா ) க் காலங்களில் மக்கள் திரளாகக் கூடுவர்.

15 ஈயக்கட்டி ( பழு. பளு ) வாயிருக்கும்.

16 மரம் ( பழு, பளு ) த்தாற் பறவைகள் வந்து கூடும்.

பயிற்சி :- 59

# எண்ணி அறிய முடியும் பொருளும் எண்ணி அறிய முடியாப் பொருளும்

நாம் காணும் பொருள்கள் இரு வகைப்படும். ஒன்று, இரண்டு, ஏழு, பத்து, நூறு எனக் கணக்கிட்டுச் சொல்லக் கூடிய பொருள்கள் ஒருவகை. ஒன்று, இரண்டு, ஐந்து எனக் கணக்கிட்டுக் கூறமுடியாத நிலையிலுள்ள பொருள்கள் மற்றொரு வகை.

மனிதர், பறவை, மலர், பசு, செடி, எறும்பு போன்றவை எண்ணிச் சொல்லக் கூடியனவாகும். இவற்றை, 'மனிதர் நால்வர், ஐந்து பறவைகள், ஏழு மலர்கள், பத்துச் செடிகள், நூறு பசுக்கள், ஓர் எறும்பு' எனக் கணக்கிட்டுக் கூறலாம்.

காற்று, நீர், பசுமை முதலியவை, இத்தனையெனக் கணக்கிட்டுச் சொல்ல முடியாதவை. இவற்றை, "நான்கு காற்றுக்கள்! ஒன்பது நீர்கள்! பதினாறு பசுமைகள்!" எனக் கூறமுடியாது. அவ்வாறு கூறினால் கேட்பவர் சிரிப்பர்!

ஆகவே, நீங்கள் பார்க்கும் பொருள்களுள் கணக்கிட்டுக் கூறமுடிந்தவை யாவை? கணக்கிட்டுக் கூறமுடியாதவை யாவை? என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அடியில் உள்ள பெயர்ச் சொற்களில் எண்ணிக் கூற முடிந்த பெயர்ச் சொற்களையும், எண்ணிக் கூறமுடியாப் பெயர்ச் சொற்களையும், கட்டமிடப் பட்டுள்ள இடத்தில் தனித்தனியே எழுது.

**மாதிரி :-**

| எண்ண முடிந்தது | எண்ண முடியாதது |
|---|---|
| கிளி | மின்சாரம் |

| | எண்ணக் கூடியவை | எண்ணக் கூடாதவை |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |
| 13 | | |
| 14 | | |
| 15 | | |
| 16 | | |

## வகைப் படுத்த வேண்டிய சொற்கள்

1. புகை 2. தேங்காய் 3. எண்ணெய் 4. குதிரை 5. தங்கம் 6. மாங்காய் 7. மகிழ்வு 8. மேசை 9. வெளிச்சம் 10. புத்தகம் 11. இருள் 12. புரு 13. சீனி 14. மிதிவண்டி 15. பஞ்சு 16. இயந்திரம் 17. பால் 18. வாழைமரம் 19. குளிர் 20. மாதுளம்பழம் 21. வெண்ணெய் 22. புகைவண்டி 23. கண்ணீர் 24. விமானம் 25. தண்மை 26. பெட்டி 27. ஈயம் 28. கரும்பு 29. சருக்கரை 30. இலை 31. கசப்பு 32. மூங்கில்

பயிற்சி :- 60

## வாக்கியங்கள் அமைத்தல் I.

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லேயும் பொருள் விளங்க, ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்தெழுது.

**மாதிரி :–**

1. பசுமை... 2. கவனமாய்...

1. புல் ***பசுமை***யாயிருக்கின்றது
2. பிள்ளைகள் பாடங்களைக் ***கவனமாய்ப்*** படிக்க வேண்டும்.

1 அழகாய் ..............................

..............................

2 நகரும் ..............................

..............................

3 படங்கள் ..............................

..............................

4 பார்த்து ..............................

..............................

5 ஒவ்வொன்ருய் ..............................

..............................

6 விரைவாக ..............................

..............................

7 சிவப்பு ..............................

..............................

8 படரும் ..............................

..............................

9 சோம்பல் ..............................

..............................

10 விழிப்பாய் ..............................

..............................

பயிற்சி :- 61

## வாக்கியங்கள் அமைத்தல் II.

அடியில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சோடிச் சொற்களையும் பொருள் விளங்க, ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்தெழுது.

**மாதிரி :-**

படங்கள் – புத்தகத்தில்.
பாடப் **புத்தகத்தில் படங்கள்** நிறைய உள்ளன.

1 பிராணி – எறும்பு ..........

..........

..........

2 குளிர் – மழை ..........

..........

..........

3 மகிழ்ச்சி–விடுமுறை ..........

..........

..........

4 பாடம் – மலாய் ..........

..........

..........

5 வலிமை – சத்து ..........

..........

..........

பயிற்சி :- 62

## தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக்குதல்.

1. நக்குகிற நாய் செக்கு என்று பாராது.
2. அது சிவலிங்கம் என்று பாராது.

இவை தனி வாக்கியங்கள் இவற்றை, 'நக்குகிற நாய் செக்கு என்றோ சிவலிங்கம் என்றோ பாராது.'

அல்லது

'நக்குகிற நாய் செக்கு என்றும் சிவலிங்கம் என்றும் பாராது.' - என ஒரே வாக்கியமாக்கலாம். இவ்வாறு, தனி வாக்கியங்களை ஒரே வாக்கியமாக்குவதைத் **தொடர் வாக்கியம்** என்பர்.

கீழே தனி வாக்கியங்கள் அடங்கிய சில தொகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு தொகுதியையும் ஒவ்வொரு தொடர் வாக்கியமாக்கு.

**மாதிரி :-** காலை துயில்வான் பதர். மாலை இருப்பான் பதர்.
***'காலை துயில்வானும் மாலை இருப்பானும் பதராவர்.'***

1 கொண்ட மனைவியைப் பேணுதிருப்பவன் பதர்.
பிறன் மனைவியை விரும்புவோன் பதர்.

..................................................

..................................................

2 குடிகளை வருத்தும் கொற்றவன் பதர்.
சோம்பியிருக்கும் உழவன் பதர்.

..................................................

..................................................

3 தன் பெருமை சொல்லித் தன்னைப் புகழுவோன் பதர்.
தன் கைப்பொருளை பிறரிடங் கொடுத்து ஏமாறுவோன் பதர்.

..................................................

..................................................

4 போருக்குப் பயந்து ஓடுகின்றவன் பதர்.
பெரியோர் அறிவுரையைக் கேளாதவன் பதர்.

..................................................

..................................................

5 தேடிய செல்வத்தை நுகராமல் இறக்கும் கருமி பதர்.
குடும்ப ரகசியத்தைப் பிறரறியக் கூறுபவன் பதர்.

..................................................

..................................................

பயிற்சி :– 63

# தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்கள் ஆக்குதல்.

'காணாத இடத்திற் புறங்கூறுவோனும் பெற்றோரைப் புறக்கணிப்போனும் பதராவர் - இது ஒரு தொடர் வாக்கியம். இதனைக்,

1. காணாத இடத்திற் புறங்கூறுவோன் பதர்.

2. பெற்றோரைப் புறக்கணிப்போன் பதர். — என இரு சிறு வாக்கியங்களாகப் பிரிக்கலாம். இவ்வாறு பிரித்தெழுதப்படும் சிறு வாக்கியங்களைத் **தனி வாக்கியங்கள்** அல்லது **தனித் தொடர்கள்** என்பர்.

கீழேயுள்ள ஒவ்வொரு தொடர் வாக்கியத்தையும் இரண்டிரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்தெழுது.

**மாதிரி :–**

நலிந்தோர்க்கு நாளும் கிழமையும் கிடையா.

***1. நலிந்தோர்க்கு நாள் கிடையாது.***

***2. அவர்க்குக் கிழமை கிடையாது.***

1 அறிவிலார்க்கு அச்சமும் நாணமும் கிடையா.

........................................................................................................................

........................................................................................................................

2 முதலைக்கு நீச்சும் நிலையும் இரா.

........................................................................................................................

........................................................................................................................

3 வரும் பொருள் உரைத்தல் அமைச்சருக்கும், அஞ்சாமை வீரனுக்கும் அழகாகும்

........................................................................................................................

........................................................................................................................

4 கெட்டோர்க்குக் கேளிரும் நண்பரும் இரார்.

........................................................................................................................

........................................................................................................................

5 கதிரவனைக் காணாமல் தாமரையும், திங்களைக் காணாமல் அல்லியும் வாடின.

........................................................................................................................

........................................................................................................................

பயிற்சி :- 64

# திணை

திணை என்ற சொல், **குலம், ஒழுக்கம், பகுப்பு** எனப் பொருள்படும். உலக உயிர்களைத் தமிழர் இரு பெரும் பிரிவினுள் அடக்குவர். ஒரு பிரிவைப் பகுத்தறிவு உடையது என்னும் பொருள்பட ***உயர்திணை*** என்பர்.

இன்னொரு பிரிவைப் பகுத்தறிவு இல்லாதது என்னும் பொருள்பட ***(அல் + திணை) அஃறிணை*** என்பர்.

ஓர் அறிவுடைய புல், பூண்டு முதல், ஐந்து அறிவுகளுடைய பறவை, விலங்குகள் வரை ***அஃறிணை*** என்னும் பிரிவினுள் அடங்கும்.

ஆறு அறிவுகளையுடைய மாந்தரும், அவர்கள் வணங்கும் இறைவனும் ***உயர்திணை*** என்னும் பிரிவுனுள் அடங்குவர்.

மனிதன் உயர்திணையேயாயினும் அவனுடைய உடல் அஃறிணையேயாகும். அதனாலேயே மனித உடலைக் **கட்டை** எனப்பழிக்கின்றனர். இனி, மனிதனுடைய கை, கால், கண், தலை முதலிய உறுப்புக்கள் யாவும் அஃறிணையேயாகும்.

இடம் விட்டு இடம் பெயராத **மலை, கடல், வானம், ஞாயிறு, திங்கள்** முதலியனவும் அஃறிணையேயாம்.

கீழ்க்கண்ட தொடர்களில், தடித்த எழுத்துக்களில் உள்ள பெயர்ச் சொற்களை, ‘ உயர்திணை – அஃறிணை ’ என வகைப்படுத்து.

**மாதிரி :-** ***மலாயர்*** ஒற்றுமையுடையவர்கள்.
***வானம்*** நீலமாயிருக்கிறது.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| மலாயர் | வானம் |

1 **துங்கு** நிறவெறியை எதிர்த்தார்.
2 **பாண்டியர்** தமிழை வளர்த்தனர்.
3 **கிளி** கொஞ்சிப் பேசுகிறது.
4 **புலி** குரூரமுடையது.
5 **வரதராசனர்** உயரிய சிந்தனையாளர்.
6 **பினங்கு** வளமுடையது.
7 **ரப்பர்** பயன் மிகுந்தது.
8 **தமிழ்வேள்** தமிழ்ப்பற்று மிக்கவர்.
9 **ஆங்கிலேயர்** இனப்பற்று மிக்கவர்.
10 **ஈயம்** பளுவானது

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| 1 .................... | 1 .................... |
| 2 .................... | 2 .................... |
| 3 .................... | 3 .................... |
| 4 .................... | 4 .................... |
| 5 .................... | 5 .................... |

பயிற்சி :- 65

## பால்.

திணையின் பகுப்பை, அதன் உட்பிரிவைப் ***பால்*** என்பர். உயர்திணையை ***ஆண்பால், பெண்பால், பலர்பால்*** என மூவகையாக்குவர். அஃறிணையை ***ஒன்றன் பால், பலவின் பால்*** என இருவகையாக்குவர்.

முருகன், பாண்டியன், ஆரோக்கியசாமி, அபுபக்கர் என, ஆண்களில் ஒவ்வொருவரையும் தனித்தனியே குறிப்பது, ***'ஆண்பால்'*** ஆகும்.

பூங்குழலி, குமுதவல்லி, பிலோமினுள், பாத்திமா எனப் பெண்களுள் ஒவ்வொருவரையும் தனித்தனியே குறிப்பது, ***'பெண்பால்'*** ஆகும்.

***பெண்டிர், மகளிர்*** எனப் பெண்கள் பலரையோ, ***ஆடவர், வீரர்கள்*** என ஆண்கள் பலரையோ, ***மக்கள், ஆன்ருேர், குடிகள்*** என ஆண் பெண் இரு பாலரும் அடங்கிய பலரையோ குறிப்பது, ***'பலர்பால்'*** ஆகும்.

*[ தமிழ் இலக்கணங்களில் கடா - மறி; கடுவன் - மந்தி; சேவல் – பெட்டை; என, அஃறிணை உயிர்களான சில விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் ஆண் பெண் வேறுபாடு களைக் குறிக்கத் தனித்தனியே பெயர்களிருக்கின்றன. எனினும் அவற்றை ஆண்பால், பெண்பால் எனக் குறிக்காமல், ஒன்ருய் இருந்தால் 'ஒன்றன்பால்' எனவும், பலவாயிருந்தால், பலவின்பால்' எனவும் குறிப்பிடுவதுதான் மரபு. தவிர, எல்லாப் பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் அவற்றின் ஆண் பெண்களைத் தனித்தனியே குறிக்கப் பெயர்களுமில்லை யென்பது கருதத் தக்கது. ]*

'குருவி, பசு, தென்னை, வீடு, குன்று' என மனிதரல்லாத பிற உயிரையோ, பொருளையோ தனித்தனியே, ***'ஒன்றன்பால்'*** அல்லது ***'ஒருமைப்பால்'*** என்பர்.

'குருவிகள், பசுக்கள், தென்னைகள், வீடுகள், குன்றுகள்' எனப் பிற உயிர்கள் அல்லது பொருள்கள் பலவற்றைப் ***'பலவின்பால்'*** அல்லது ***'பன்மைப்பால்'*** என்பர்.

கீழேயுள்ள தொடர்களில் வந்துள்ள ஆணைக் குறிக்கும் சொல்லைப் பெண்ணாகவும், பெண்ணைக் குறிக்கும் சொல்லை ஆணாகவும் மாற்றி, அந்தந்தத் தொடரின் எதிரே எழுது.

**மாதிரி :–**

| | | |
|---|---|---|
| 1 | அரசன் யாழ் மீட்டினான். | **அரசி யாழ் மீட்டினாள்.** |
| 2 | ஒருத்தி காளைகளைத் துரத்தினாள். | **ஒருத்தன் பசுக்களைத் துரத்தினான்.** |

| | | |
|---|---|---|
| 1 | மறவன் பகைவரை எதிர்த்தான். | |
| 2 | தலைவன் நூலை வாசித்தான். | |
| 3 | நம்மவன் என்று குற்றம் புரியலாமா ? | |
| 4 | நல்லவன் என்று பெயர் பெற வேண்டும். | |
| 5 | ஆசிரியன் சொல்லை மாணவர் கேட்க வேண்டும். | |
| 6 | களிறு புலியைத் தாக்கிற்று. | |
| 7 | பொன்னன் வீடு வாங்கினான். | |
| 8 | சேங்கன்று அழகாயிருக்கிறது. | |
| 9 | தனவான்களுக்கு இரக்கம் வேண்டும். | |
| 10 | குழந்தை அப்பனைப் போலிருக்கிறது. | |
| 11 | செவிடன் இசையை அறிவானா ? | |
| 12 | குணவதிகள் பிறருக்கு வழங்குவர். | |
| 13 | கூனன் குறும்பு மிகுந்தவன். | |
| 14 | எருமைக் கடா ஏர் உழும். | |
| 15 | குருடன் கோல் வைத்திருக்கிறான். | |

பயிற்சி :- 66

## ஒருமை - பன்மை.

கீழேயுள்ள ஒருமையைக் குறிக்கும் தொடர்களைப் பன்மையைக் குறிக்கும் தொடர்களாக மாற்று.

**மாதிரி :—**

துரிஞ்சில் இருளடைந்த இடத்தில் வாழும். - ஒருமைத் தொடர்.
துரிஞ்சில்கள் இருளடைந்த இடங்களில் வாழும். - **பன்மைத் தொடர்.**

### ஒருமைத் தொடர்

1 குரங்கு காட்டில் வாழும்.
2 இறைக்கும் கிணறு சுரக்கும்.
3 குதிரைக்குக் கொம்பு இல்லை.
4 மயிலுக்குத் தலை சிறியது.
5 மயில் பாம்பைக் கண்டால் குத்திக் கொன்றுவிடும்.
6 வாத்து நீரிலும் நிலத்திலும் வாழும்.
7 மீனுக்கு கழுத்து இல்லை.
8 வெள்ளாட்டின் பால் சத்துள்ளது.
9 எலி எண்ணெயை நக்கிக் குடிக்கும்.
10 யானை காட்டில் வாழும்.

### பன்மைத் தொடர்

1 ........................................
2 ........................................
3 ........................................
4 ........................................
5 ........................................
6 ........................................
7 ........................................
8 ........................................
9 ........................................
10 ........................................

பயிற்சி :- 67

## பன்மை - ஒருமை.

கீழேயுள்ள பன்மையைக் குறிக்கும் தொடர்களை, ஒருமையைக் குறிக்கும் தொடர்களாக மாற்று.

**மாதிரி :-**

காக்கைகள் திருட்டுக் குணமுடையவை. - பன்மைத் தொடர்.
காக்கை திருட்டுக் குணமுடையது. - **ஒருமைத் தொடர்.**

### பன்மைத் தொடர்

1 தென்னம் பூக்கள் வெண்மையாயிருக்கும்.
2 கொடிகள் பந்தல்களிற் படரும்.
3 முருங்கை மரங்கள் வலுவற்றவை.
4 கழுகுகள் மலைகளின் உச்சியிற் கூடுகள் கட்டும்.
5 கமுகுகள் மிக உயரமாய் வளரும்.
6 அரேபியாவிற் பேரீச்ச மரங்கள் வளருகின்றன.
7 அரேபியக் குதிரைகள் சிறந்தவை.
8 அருவிகள் மலைகளில் உற்பத்தியாகின்றன.
9 மங்குஸ்தீன் பழங்கள் சிவந்த நிறமுடையவை.
10 புலிகள் சிங்கங்களைவிடக் கொடியவை.

### ஒருமைத் தொடர்

1 ........................................
2 ........................................
3 ........................................
4 ........................................
5 ........................................
6 ........................................
7 ........................................
8 ........................................
9 ........................................
10 ........................................

பயிற்சி :- 68

# காலம்.

பொழுது **புலர்ந்தது**. சேவல் சிறகடித்துக் கூவிற்று. ஞாயிறு கிழக்கில் **எழுகிறது**. தொழிலாளர்கள் வேலைக்குச் **செல்வர்**. இவ்வாறு ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு சமயத்தில் நடைபெறும். ஒவ்வொரு செயலும் நடைபெறுகின்ற நேரத்தை, மொழிப் பாடத்திற் **காலம்** எனக் குறிப்பிடுவர்.

காலம் மூன்று வகைப்படும். ஒன்று முன்பே ஒரு செயல் நடைபெற்ற காலம். இக் காலத்தை, **இறப்பு** அல்லது **செலவு** அல்லது **இறந்த காலம்** என்பர்.

இன்னொன்று, இப்பொழுது ஒரு செயல் நடைபெறுகின்ற நேரம். இந் நேரத்தை, **நிகழ்வு** அல்லது **இருப்பு** அல்லது **நிகழ்காலம்** என்பர்.

மற்றொன்று, இனிமேல் ஒரு செயல் நடைபெறவிருக்கின்ற சமயம். அச் சமயத்தை **எதிர்வு** அல்லது **வரவு** அல்லது **எதிர்காலம்** என்பர்.

கீழே இறந்த காலத்தைக் குறிக்கும் தொடர்கள் சில இருக்கின்றன. அவற்றை நிகழ்காலத்தைக் குறிக்கும் தொடர்களாகவும், எதிர்காலத்தைக் குறிக்கும் தொடர்களாகவும் மாற்று.

**மாதிரி :—**

| இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|
| பொழுது புலர்ந்தது. | **பொழுது புலர்கிறது.** | **பொழுது புலரும்.** |
| 1 நெருப்பு எரிந்தது. | ................................ | ................................ |
| 2 கிழக்கு வெளுத்தது. | ................................ | ................................ |
| 3 பூ மலர்ந்தது. | ................................ | ................................ |
| 4 கண் திறந்தது. | ................................ | ................................ |
| 5 கதிரவன் காய்ந்தது. | ................................ | ................................ |
| 6 மழை பொழிந்தது. | ................................ | ................................ |
| 7 குழந்தை புரண்டது. | ................................ | ................................ |
| 8 மொழி வளர்ந்தது. | ................................ | ................................ |
| 9 வாணிகம் பெருகிற்று. | ................................ | ................................ |
| 10 விழா நடைபெற்றது- | ................................ | ................................ |

பயிற்சி :- 69

# இடைச் சொற்கள்.

**'ஆம், உம், தான், தாம், ஒப்ப, ஒத்த; போல, போன்ற, ஆல், ஆனால், எனவே, ஆதலால், ஐயோ, அந்தோ, ஆகா, அடடா, படபட, சிவ்வென.'**

மேற்கண்ட சொற்களைக் கவனி. இவை போன்ற வேறு பல சொற்களையும் நீ, படித்திருப்பாய்; பிறர் கூறக் கேட்டிருப்பாய். இவை பெயர்ச் சொற்களல்ல; வினைச் சொற்களும் அல்ல.

இவை தனித்து நின்று பொருள்களை உணர்த்தா. எனினும், இவை மொழி வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதவை. இவை சொற்களின் இடையில் நின்று, சொற்றொடருக்கு ஆக்கமூட்டும். இவை சொற்களுக்கு இடையில் வருவதால், இவற்றை **'இடைச் சொற்கள்'** என்பர்.

கீழே கோடிட்ட இடங்களில் பொருத்தமான இடைச் சொற்களை எழுது. நிரப்பவேண்டிய இடைச்சொற்கள் வாக்கியங்களின் அடியில் உள்ளன.

**மாதிரி :-**

'தான், தாம், ஒத்த, போல.'

1 காட்டு விலங்குகளில் புலி **தான்** குரூரமானது.

2 சுவாமி சத்தியாநந்தா **தாம்** தன்னலமற்று வாழ்கிறார்.

3 நன்றி மறவாமையில் நாயை **ஒத்த** உயிர் உண்டா?

4 காகத்தைப் **போல** இனப்பற்று வேண்டும்.

1 .................... ! வானவில் எவ்வளவு அழகாயிருக்கிறது?

2 .................... , பரிதாபம்! கண்ணில்லாதவனை வண்டி மோதிவிட்டது.

3 ஓநாயைப் .................... கொடிய விலங்குகள் உண்டா?

4 பூனை நன்றியில்லாதது .................... எலிகளைக் கொல்கிறது.

5 கிட்டா .................... மலாயாவின் நெற்களஞ்சியம்.

6 எறும்பை ....................ச் சுறுசுறுப்பு உண்டா?

7 சிட்டுக்குருவி ....................ப் பறந்து சென்றது.

8 சேவல் .................... வெனச் சிறகை அடித்துக் கூவிற்று.

9 படித்தவர் .................... படித்தவரை விரும்புவர்.

10 சாலையில் விளையாடினால் ஆபத்து. .................... அங்குப் போய் ஆடாதே.

**நிரப்ப வேண்டிய இடைச் சொற்கள்.**

1. போல 2. தான் 3. சிவ்வென 4. ஆனால் 5. படபட 6. போன்ற 7. தாம் 8. ஐயோ 9. ஆதலால் 10. ஆகா.

பயிற்சி :- 70

## சுட்டுச் சொற்கள்.

கைப் பெருவிரலை அடுத்துள்ள விரல், **ஆட்காட்டி விரல்** எனப்படுகிறது. அவ்விரலால், ***'அவர், இப்புத்தகம்'*** என மனிதரையும் பிற பொருள்களையும் சுட்டிக் காட்டுகிறோம். இவ்வாறு ஒன்றைச் சுட்டிக் காட்ட உதவுஞ் சொல்லைச் **சுட்டுச்சொல்** என்பர்.

கீழ்க்கண்ட தொடர்களில் உள்ள சுட்டுச் சொற்களை அத்தொடர்களின் அடியிற் கோடிட்ட இடங்களில் தனியே எடுத்து எழுது.

**மாதிரி :-**

எறும்பை மிதித்தால் **அது** வெடுக்கென்று கடிக்கும்.

**சுட்டுச் சொல் :** அது.

1 அதோ பார் வானவில்!
2 நீ தேடிய நூல் இதோ இருக்கிறது.
3 இந்தப் புத்தகத்தை விரும்புகிறாயா ?
4 அந்த வீடு உன்னுடையதா ?
5 அவை டுரியான் மரங்கள்.
6 இக் குழந்தை அழகானது.
7 அப் பாடம் எளிதானது.
8 இப் படம் உன்னால் வரையப் பட்டதா ?
9 அவன் பந்தை எற்றுகிறான்.
10 இவள் கோலம் போடுகிறாள்.

### சுட்டுச் சொற்கள்.

1. .................... 4. .................... 7. .................... 10. ....................

2. .................... 5. .................... 8. ....................

3. .................... 6. .................... 9. ....................

பயிற்சி :— 71

## ஏற்ற பயனிலைகளை எழுதுதல்.

நீலாவதி படிக்கிருள் என்பது ஒரு சொற்றொடர். இதில் நீலாவதி என்பது, ஒரு சிறுமியின் பெயரைக் குறிக்கும் பெயர்ச் சொல் ஆகும். படிக்கிருள் என்பது, அவளுடைய செயலைக் குறிக்கும் வினைச்சொல் ஆகும்.

ஒரு தொழிலை அல்லது செயலைச் செய்பவரை உணர்த்தும் சொல்லை **எழுவாய்** என்பர். எழுவாயைக் குறிக்கும் சொல் எப்போதும் பெயர்ச் சொல்லாகவேயிருக்கும்.

(எழுவாயாக வரும்) அது, அல்லது அவன், அல்லது அவள் செய்யும் தொழிலை உணர்த்தும் சொல்லைப் **பயனிலை** என்பர்.

ஒரு வாக்கியத்தின் முதலில் எழுவாயும் கடைசியிற் பயனிலையும் இருக்கும்.

கீழ்க்கண்ட தொடர்களிற் கோடிட்ட இடங்களில், ஏற்ற பயனிலைகளை எழுது.

**மாதிரி :—**

ஞாயிறு **எழுந்தது.**

| | |
|---|---|
| 1 மலர் ........ | 9 குழந்தை ........ |
| 2 பனி ........ | 10 சிறுவர் ........ |
| 3 கிளை ........ | 11 குளம் ........ |
| 4 இலை ........ | 12 அலை ........ |
| 5 புல் ........ | 13 கப்பல் ........ |
| 6 பழம் ........ | 14 நத்தை ........ |
| 7 நிலவு ........ | 15 முதலை ........ |
| 8 வெள்ளம் ........ | 16 இடி ........ |

### கோடிட்ட இடங்களில் நிரப்ப வேண்டிய சொற்கள்.

1. பெருகிற்று 2 தூங்குகிறது 3. எரித்தது 4. ஓடினர் 5. விழுந்தது 6. நிரம்பியது 7. வளர்ந்தது 8. எழுந்தது 9. உதிர்கிறது 10. செல்கிறது 11. அசைந்தது 12. ஊர்ந்தது 13. பெய்கிறது 14. நீந்துகிறது 15. மலர்ந்தது 16. முழங்கிற்று.

பயிற்சி :– 72

## ஏற்ற எழுவாய்களை எழுதுதல்.

.......................... **கூவிற்று** என்பது ஒரு தொடரின் பயனிலையைக் காட்டுகிறது. இச் சொல்லை வைத்து, எது கூவிற்று? என்ற வினவை எழுப்பினல், **குயில்** அல்லது **சேவல்** என்னும் விடை கிடைக்கும். இவ்வாறு கிடைக்கும் விடையை **எழுவாய்** என்பர்.

கீழ்க்கண்ட தொடர்களிற் கோடிட்ட இடங்களில் ஏற்ற எழுவாய்களை எழுது.

**மாதிரி :–**

**ஆறு** பாய்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | ..........................விளைந்தது. | 9 | ..........................கரைந்தது. |
| 2 | ..........................முளைத்தது. | 10 | ..........................அலறிற்று. |
| 3 | ..........................வீசிற்று. | 11 | ..........................பொங்குகிறது. |
| 4 | ..........................பரவுகிறது. | 12 | ..........................பறந்தது. |
| 5 | ..........................நீந்துகிறது. | 13 | ..........................பின்னுகிறது. |
| 6 | ..........................தாவிற்று | 14 | ..........................தைக்கிறது. |
| 7 | ..........................மின்னுகிறது. | 15 | ..........................பொழிகிறது. |
| 8 | ..........................கீச்சிடுகிறது. | 16 | ..........................காய்கிறது. |

### கோடிட்ட இடங்களில் நிரப்ப வேண்டிய சொற்கள்.

1. கிளி 2. காகம் 3. மின்னல் 4. குழந்தை 5. குரங்கு 6. கடல்
7. மீன் 8. பறவை 9. மணம் 10. சிலந்தி 11. காற்று 12. ஊசி
13. புல் 14. வானம் 15. பயிர் 16. வெயில்.

பயிற்சி :- 73

# ஏற்ற செயப்படுபொருள்களை எழுதுதல்.

**பசு மேய்கிறது** என்பது ஒரு சொற்றொடர். இதில், 'மேய்கிறது' என்பது பயனிலை. இப் பயனிலையைக் கொண்டு, எது மேய்கிறது ? என்னும் கேள்வியைக் கேட்டால், 'பசு' என்னும் விடை கிடைக்கிறது. பசு என்பது இத்தொடரின் எழுவாய் ஆகும்.

பசு என்னும் எழுவாயை வைத்து, எதை மேய்கிறது ? என்னும் வினவை எழுப்பினால், **புல்லை** என்னும் விடை கிடைக்கிறது. இந்தப், '**புல்லை**' என்பது இத் தொடரின் **செயப்படுபொருள்** ஆகும். செயப்படுபொருள் எப்போதும் பெயர்ச் சொல்லாகவேயிருக்கும்.

கீழேயுள்ள தொடர்களிற் கோடிட்ட இடங்களில் ஏற்ற செயப்படு பொருள்களை எழுது.

**மாதிரி :—**

தூக்கணங்குருவி வலை பின்னுகிறது.

1 சிலந்தி ........................ பின்னுகிறது.

2 மொழி ........................ உணர்த்துகின்றது.

3 விளம்பரம் ........................ வளர்க்கிறது.

4 நோய் ........................ க் குறைக்கிறது.

5 ஒளி ........................ அகற்றுகிறது.

6 உணவு ________________ நீக்குகிறது.

7 அரம் ........................ அராவுகிறது.

8 பாம்பு ........................ விழுங்குகின்றது.

9 கீரி ........................ க் கொன்றது.

10 திருக்குறள் ........................ வளர்க்கும்.

## கோடிட்ட இடங்களில் நிரப்ப வேண்டிய சொற்கள்.

1. பசியை 2. இருளை 3. இரும்பை 4 வலுவை 5. தவளையை
6. வாணிகத்தை 7. பாம்பை 8. கருத்தை 9. அறிவை 10. வலை

பயிற்சி :– 74

# எழுவாய் - பயனிலை - செயப்படுபொருள்.

ஒரு சொற்றொடரின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் காண, முதலிற் பயனிலையை அறிதல் வேண்டும். பின்னர், அப்பயனிலையைக் கொண்டு எழுவாயையும், பிறகு அவ் எழுவாயைக்கொண்டு செயப்படுபொருளையும் காணுதல் முறையாகும்.

'பூனை எலியைக் கவ்விற்று' என்பது ஒரு தொடர். இதில், **கவ்விற்று** என்பது **பயனிலை**. இப்பயனிலையைக் கொண்டு, எது கவ்விற்று? எனக் கேட்டாற் கிடைக்கும் விடை 'பூனை' என்பதாகும். எனவே, **பூனை** என்பது **எழுவாய்**. இப் பூனை என்ற எழுவாயைக்கொண்டு எதை? என வினவினால், 'எலியை' என விடை கிடைக்கிறது. ஆகவே, **எலியை** என்பது **செயப்படுபொருள்** ஆகும். இவ்வாறே பிற தொடர்களுக்கும் எழுவாய் பயனிலை, செயப்படுபொருள்களை அறிந்துகொள்.

அடியிலுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் எழுவாய் – பயனிலை – செயப்படுபொருள்களை எழுது.

**மாதிரி :–** 'புலி மானைத் துரத்திற்று'

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| புலி | துரத்திற்று | மானை |

1 அவ்வையார் நீதி நூல் அருளினார்.
2 புகழேந்தி நளவெண்பா இயற்றினார்.
3 ஓவியன் படம் வரைகிறான்.
4 தாயார் பால் ஊட்டினார்.
5 செல் பலகையை அரிக்கிறது.
6 கிளி கொட்டையைத் தின்றது.
7 குரங்கு கிளையை அசைத்தது.
8 பால் உடலை வளர்க்கும்.
9 சிற்பி சிலையைச் செதுக்கினார்.
10 கொத்தர் சுவர் எழுப்பினார்.

| | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1 | .................... | .................... | .................... |
| 2 | .................... | .................... | .................... |
| 3 | .................... | .................... | .................... |
| 4 | .................... | .................... | .................... |
| 5 | .................... | .................... | .................... |
| 6 | .................... | .................... | .................... |
| 7 | .................... | .................... | .................... |
| 8 | .................... | .................... | .................... |
| 9 | .................... | .................... | .................... |
| 10 | .................... | .................... | .................... |

பயிற்சி :- 75

# பயனிலை அடைமொழி.

பெரும்பாலும் வினைச் சொற்களே பயனிலையாக வரும். பயனிலையாகிய வினைச் சொல்லுக்கு முன் வந்து அமைகின்ற அடைமொழியை **வினை அடை மொழி** அல்லது **வினை உரிச்சொல்** என்பர்.

'உழைத்தவன் உணவைச் சுவைத்து உண்டான்' இத்தொடரில் உள்ள 'உண்டான்' என்னும் வினைச்சொல் பயனிலை ஆகும்.

**சுவைத்து** என்னும் சொல், உண்டான் என்னும் பயனிலைக்கு முன் நின்று, உணவு உண்ட இயல்பைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறு ஒரு பயனிலை யின் தன்மையை உணர்த்தவரும் அடைமொழியைப் **பயனிலை அடைமொழி** என்பர்.

அடியிற் காணப்படும் தொடர்களில் உள்ள பயனிலை அடைமொழிகளைக் கட்டமிட்டுள்ள இடத்தில் எடுத்தெழுது.

**மாதிரி :–**

'எறும்பு மெதுவாக ஊரும்'

பயனிலை அடைமொழி : **மெதுவாக**

1. சூறுவளி சுழன்று வீசும்.
2. பால் பொங்கி வழிந்தது.
3. கிளை மெல்ல அசைந்தது.
4. புல் செழித்து வளர்ந்தது.
5. புதர் அடர்த்தியாய் இருந்தது.
6. பசு குனிந்து மேய்ந்தது.
7. கதிர் சாய்ந்து கிடந்தது.
8. பன்றி சேற்றில் புரண்டது.
9. விமானம் வேகமாய்ப் பறந்தது.
10. கிழவன் தள்ளாடி விழுந்தான்.

## எழுத வேண்டிய பயனிலை அடைமொழிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ........................ | 6 | ........................ |
| 2 | ........................ | 7 | ........................ |
| 3 | ........................ | 8 | ........................ |
| 4 | ........................ | 9 | ........................ |
| 5 | ........................ | 10 | ........................ |

பயிற்சி :– 76

# எழுவாய் அடைமொழி.

ஒரு பொருளின் குணத்தை விளக்க உதவும் பண்புச் சொல்லை **அடைமொழி** அல்லது **உரிச்சொல்** என்பர்.

அடைமொழிகள் இருவகைப்படும். ஒன்று **பெயர் அடைமொழி ;** மற்றொன்று **வினை அடைமொழி.**

பெயர்ச் சொற்களே எழுவாயாகவும், செயப்படுபொருளாகவும் வருகின்றன. ஆகவே, எழுவாய், செயப்படுபொருள்களுக்கு முன் வரும் அடைமொழிகளைப் **பெயர் அடைமொழிகள்** என்பர்.

"பொல்லாத பையன் எறும்பை நசுக்குகிறான்". இத் தொடரில் உள்ள பையன் என்னும் பெயர்ச் சொல் இத் தொடரின் எழுவாயாகும். பையன் என்னும் எழுவாய்க்கு முன் வந்துள்ள, 'பொல்லாத' என்னும் சொல் பையனின் (தீய) குணத்தை உணர்த்தும் **எழுவாய் அடைமொழி**யாகும்.

கீழ்க்கண்ட தொடர்களிலுள்ள எழுவாய் அடைமொழிகளைத் தனியே எடுத்தெழுது.

**மாதிரி :–**

'கருத்துள்ள பையன் படிக்கிறான்'.
எழுவாய் அடைமொழி : **கருத்துள்ள**

| | |
|---|---|
| 1 மழைமேகம் திரண்டது. | 2 வெண்முகில்கள் நகர்ந்தன. |
| 3 கருநாகம் ஓடிற்று. | 4 தென்றல்காற்று வீசிற்று. |
| 5 படர்கொடி படர்ந்தது. | 6 தோகை மயில் ஆடிற்று. |
| 7 அஞ்சல் வண்டி சென்றது. | 8 சோம்பேறிப் பையன் உறங்குகிறான். |
| 9 கூண்டுக்கிளி பேசுகிறது. | 10 புள்ளிமான் மேய்கிறது. |

**எழுத வேண்டிய எழுவாய் அடைமொழிகள்.**

| | |
|---|---|
| 1 ........................ | 6 ........................ |
| 2 ........................ | 7 ........................ |
| 3 ........................ | 8 ........................ |
| 4 ........................ | 9 ........................ |
| 5 ........................ | 10 ........................ |

பயிற்சி :— 77

# செயப்படுபொருள் அடைமொழி.

'வேலன் பழைய பாடத்தைப் படித்தான்.' இத்தொடரில் உள்ள 'பாடத்தை' என்னும் பெயர்ச்சொல் செயப்படுபொருள் ஆகும்.

***பழைய*** என்னும் சொல், பாடத்தை என்னும் செயப்படுபொருளுக்கு முன் நின்று, பாடத்தின் தன்மையை உணர்த்துகின்றது. இவ்வாறு செயப்படு பொருளின் இயல்பை உணர்த்த வரும் அடைமொழியைச் ***செயப்படுபொருள் அடைமொழி*** என்பர்.

அடியிற் காணப்படும் தொடர்களில் உள்ள செயப்படுபொருள் அடைமொழி களைத் தனியே எடுத்தெழுது.

**மாதிரி :—**

'பிள்ளைகள் முதிராத பிஞ்சுகளை உதிர்த்தார்கள்'.

செயப்படுபொருள் அடைமொழி : ***முதிராத.***

1 எருமை மிகுந்த மூர்க்கம் உடையது.
2 மல்லிகை நறுமணம் நிரம்பியது.
3 பாரதியார் தேசீய கீதம் இயற்றினர்.
4 டுரியான் இனிய சுவை உடையது.
5 விமானம் பெரிய மலைகளைக் கடந்தது.
6 பசு இனிய பாலைப் பொழியும்.
7 கொல்லன் கூரிய கத்தியைச் செய்தான்.
8 முயல் பசுமையான புல்லைத் தின்றது.
9 நத்தை இலேசான தளிரைக் கடித்தது.
10 மருத்துவர் மெலிந்த நோயாளியைத் தேற்றினர்.

## எழுத வேண்டிய செயப்படுபொருள் அடைமொழிகள்.

| | |
|---|---|
| 1 ........................ | 6 ........................ |
| 2 ........................ | 7 ........................ |
| 3 ........................ | 8 ........................ |
| 4 ........................ | 9 ........................ |
| 5 ........................ | 10 ........................ |

# மாதிரி அழைப்புக் கடிதம்.

(மாணவன் தன் நண்பனுக்கு எழுதியது)

42, மார்க்கெட் ரோடு,
***சித்தியவான்.***
16 — 10 — 60

திரு. கு. வடிவேலன்,
மாணவன்,
நான்காம் வகுப்பு,
***கிந்தா எஸ்டேட் பள்ளி,***
***ஈப்போ.***

அன்புள்ள நண்பா,

நாளை இரவு மணி 7-30 க்கு, நான் படிக்கும் பாடசாலையாகிய, கணேச வித்தியாசாலையிற் 'பெற்ருேர் தின விழா' நடைபெறவிருக்கிறது.

இவ் விழாவில் பல ஆடல் பாடல்களும், ஓரங்க நாடகங்களும் இடம் பெறும். 'மலைநாட்டு வீரன்' என்ற ஓரங்க நாடகத்தில் என் நண்பர்களோடு நானும் நடிப்பேன். ஆகவே, நீ, உன் பெற்ருேரையும் அழைத்துக் கொண்டு மாலை ஆறு மணிக்கு முன்பே வந்துவிடு. உன் வருகையை மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள நண்பன்,
***ம. சவரிமுத்து.***

| | |
|---|---|
| | 10 காசு முத்திரை |
| திரு,<br>**கு. வடிவேலன்,**<br>மாணவன்,<br>நான்காம் வகுப்பு,<br>***கிந்தா எஸ்டேட் பாடசாலை,***<br>***ஈப்போ.*** | |

பயிற்சி :- 78

## அழைப்புக் கடிதம்.

உன் வீட்டில் நடைபெறும் திருமணத்திற்கு வருமாறு உன்னுடைய நண்பனுக்கோ, தோழிக்கோ ஓர் அழைப்புக் கடிதம் எழுது.

## மாதிரி விடுமுறைக் கடிதம்.

( மாணவன் ஆசிரியருக்கு எழுதுவது )

124, யார்க் ரோடு,
**பினங்கு.**
6 — 8 — 60

உயர்திரு. ஆசிரியர் அவர்கள்,
நான்காம் வகுப்பு,
**இந்து சங்கத் தமிழ்ப் பள்ளி,**
**பினங்கு.**

அன்புள்ள ஐயா,

வணக்கம்.

நேற்று மாலையில் பாடசாலையின் எதிர்ப்புறமுள்ள மைதானத்தில் என் தோழர்களோடு காற்பந்து விளையாடினேன். எதிரே ஓடிவந்த பந்தை எற்ற விசையாய் ஓடும்பொழுது, வழியிலிருந்த சிறு பள்ளத்திற் கால் இடறி விழுந்தேன். அதனால் இடக்கால் சுளுக்கிக்கொண்டது. சரிவர நடக்க இயலவில்லை. என் தந்தை மருத்துவரை அழைத்து வந்தார். மருத்துவர் என் காலிற் பலமான கட்டுப்போட்டு, நடமாடாமல் ஓரிடத்திலேயே இருக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார். ஆதலால், இன்று முதல் இன்னும் ஒரு வாரத்திற்கு எனக்கு ஓய்வு தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள,
**க. சரவணன்.**

10 காசு
முத்திரை

உயர்திரு.

ஆசிரியர் அவர்கள்,
நான்காம் வகுப்பு,
**இந்து சங்கத் தமிழ்ப் பள்ளி,**
**டத்தோ கிரமட் ரோடு,**
**பினங்கு.**

பயிற்சி :- 79

## விடுமுறைக் கடிதம்.

உன்னுடைய வீட்டில் நடைபெறவிருக்கும் திருமணத்திற்கு விடுமுறைபெற, உன் வகுப்பு ஆசிரியருக்கு ஒரு விடுமுறைக் கடிதம் எழுது.

# சிறு மாதிரி வருணனைக் கடிதம் (தீபாவளி பற்றி).

( மாணவி தன் தோழிக்கு எழுதியது )

செந்தமிழ்ப் பாடசாலை,
**தெலுக்கான்சன்.**
2 — 12 — 1960

செல்வி சு. கனிமொழி,
**முத்தமிழ்ப் பள்ளி,**
**பாகன் டத்தோ.**

அன்புள்ள தோழி,

வணக்கம். உன்னுடைய கடிதம் கிடைத்தது.

நீ, கேட்டுக் கொண்டுள்ளபடி நான் தீபாவளியைக் கொண்டாடிய விதம் பற்றி எழுதியிருக்கிறேன்.

தீபாவளியன்று அதிகாலையில் என் தம்பியையும் என்னையும் என் பெற்றோர் எழுப்பிவிட்டார்கள். இருவரும் பல் துலக்கி, எண்ணெய் தேய்த்துக் கொண்டு, வெந்நீரில் குளித்தோம். பிறகு, அப்பா குளித்தார்கள்.

அம்மா எங்கள் இருவருக்கும் புதிய ஆடைகளை அணிவித்தார்கள். அப்பாவும் நாங்களும் பூசை அறைக்குச் சென்று கடவுளை வணங்கினோம்.

பின்னர், அப்பாவுடன் ஒன்றாய் உட்கார்ந்து பலகாரங்களைத் தின்று, பால் குடித்தோம். மாலையில் நாங்கள் எல்லாரும், ‘ நாடோடி மன்னன் ’ திரைப் படம் பார்க்கச் சென்றோம். அன்று இரவு என் தம்பியும் நானும் மத்தாப்புக் கொளுத்தி விளையாடினோம். நீ, எவ்வாறு தீபாவளியைக் கொண்டாடினாய் என்பதை எழுது.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
**க. அமிர்தம்.**

செல்வி **சு. கனிமொழி,**
4-ம் வகுப்பு மாணவி,
**முத்தமிழ்ப் பள்ளி,**
**பாகன் டத்தோ.**

பயிற்சி :- 80

## வருணனைக் கடிதம்.

நீ கலந்து கொண்ட வள்ளுவர் விழா, பாரதியார் விழா, பாரதிதாசன் விழா, பொங்கற் பண்டிகை, விசாக விழா முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றை வருணித்து, உன் நண்பனுக்கோ, தோழிக்கோ ஒரு சிறு கடிதம் எழுது.

பயிற்சி :- 81

# கதைப் பொருள் அறிதல்

நிலத்தின் வடிவம் என்ன ?

அடியில் உள்ள கதையைக் கவனமாகப் படி :

ஒரு தோட்டத்தில் ஒரு தமிழ்ப் பாடசாலை இருந்தது. அதில் ஏறக்குறைய இருநூறு பிள்ளைகள் கல்வி கற்றார்கள். ஒருநாள் பாடசாலை அமைப்பாளர் அப் பள்ளியைப் பார்வையிட வந்தார். அவர் ஆறும் வகுப்பிற்குள் நுழைந்ததும் பிள்ளைகள் எழுந்து நின்றார்கள். அமைப்பாளர் ஒரு மாணவனை நோக்கி, 'பூமியின் வடிவம் என்ன ?' என்றார். அவன், 'பூமி பாடசாலையில் உருண்டை யாயிருக்கிறது, வீட்டில் தட்டையாயிருக்கிறது' என்றான். அமைப்பாளர், 'அது எவ்வாறு ?' என்றார்.

மாணவன், பாடசாலையில் ஆசிரியர் நிலம் உருண்டை வடிவம் உடையது என்கிறார் ; வீட்டில் என் தந்தையார் நிலம் தட்டையானது என்கிறார், என்றான். அவனுடைய மறுமொழியைக் கேட்டு எல்லாரும் சிரித்தனர்.

## கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுது.

1 பாடசாலை எங்கிருந்தது ?

........................................................................

2 பாடசாலையைப் பார்வையிட வந்தவர் யார் ?

........................................................................

........................................................................

3 அவர் எந்த வகுப்பறைக்குச் சென்றார் ?

........................................................................

4 அமைப்பாளர் மாணவனிடம் வினவியது என்ன ?

........................................................................

........................................................................

5 மாணவன் கூறிய மறுமொழி யாது ?

........................................................................

........................................................................


6 நிலத்தின் வடிவம் உருண்டையா? தட்டையா ?

........................................................................

........................................................................

# படங்களைப் பார்த்துக் கதை எழுதுதல்.

**மாதிரி :–**



[ படம் : அம்புலிமாமா ]

மேலே ஆறு படங்கள் இருக்கின்றன. அவற்றைக் கவனமாய்ப் பார். அவை ஒரு நிகழ்ச்சியைத் தெரிவிக்கின்றன. அந்நிகழ்ச்சிக்கு ஒரு தலைப்புக் கொடுத்து, அதை எவ்வாறு ஒரு சிறு கதையாக்கலாம் என்பதைக் கவனி.

## எலியின் தந்திரம்

ஒரு வீட்டில் தீபாவளி நாளன்று தித்திப்பு, துணி, பட்டாசுக்கட்டு முதலியன வைத்துப் படைத்தார்கள்.

அன்று ஒரு பூனை மெதுவாகப் பூசை அறையினுள் நுழைந்து, அங்கிருந்த தித்திப்புப் பொட்டலத்தைக் கவ்விக்கொண்டு போயிற்று. அதை ஓர் எலி கவனித்தது.

பூனை அடுப்பங்கரையில் அமர்ந்து, தித்திப்புப் பொட்டலத்தைக் கடித்தது. அதனைக்கண்ட எலி, பூனையை விரட்டிவிட்டுத் தித்திப்பைக் கவர்ந்துகொள்ள எண்ணிற்று.

எலி பூசை அறைக்குள் சென்று, அங்கிருந்த பட்டாசுக் கட்டை இழுத்து வந்து, பூனைக்குப் பின்னால் வைத்தது. பிறகு, அடுப்பில் எரிந்து கொண்டிருந்த ஒரு சிறு சுள்ளியைக் கொண்டுவந்து, பட்டாசுக்குத் தீ வைத்தது.


பட்டாசு, *படபட பட்பட்* என வெடிக்கத் தொடங்கியதும், பூனை தித்திப்பைப் போட்டுவிட்டு ஓடி மறைந்தது.

பின்னர், அங்கிருந்த எலிகள் ஒன்று சேர்ந்து, தித்திப்பைத் தின்று மகிழ்ந்தன.

பயிற்சி :- 82

## படங்களைப் பார்த்துக் கதை எழுதுதல்.

அடியில் ஆறு படங்கள் இருக்கின்றன. அவை ஒரு நிகழ்ச்சியைக் காட்டுகின்றன. அந்நிகழ்ச்சிக்கு ஒரு தலைப்புக் கொடுத்து, அதனை ஒரு சிறு கதையாக எழுது.




[ படம் : அம்புலிமாமா ]